வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

31.01.2021 ஞாயிற்றுக்கிழமை






07

3,000 பேருக்கு தடுப்பூசி யாழ். வைத்தியசாலையில்



10

ரோபராட்டங்களை முன்பெடுப்பதால் எந்தப்பயனுமில்லை



11

சிறந்து விளங்கும் இலங்கை



12

தடுப்பூசி தேசியவாதம் மிகமிக ஆபத்து

## இலங்கை விவகாரத்தில் ஐ.நா. நடுநிலைமை பேணவில்லை

**அமைச்சர் வாசுதேவ கவலை**



கொழும்பு,ஜன.31

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் இரு தரப்பினராலும் முன்வைக்கப்படும் கருத்துக்களை ஆராய்வது அவசியமாகும். இலங்கை விவகாரத்தில் மனித உரிமைகள் பேரவை நடுநிலைத்தன்மையைப் பேண வில்லை என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை நட்புறவுடன் செயல்படுகின்றது. ஐக்கிய நாடுகள் மனித

02

# கூட்டமைப்பின் வடக்கு முதல்வர் வேட்பாளர் மாவை சேனாதிராசா

**தமிழ் அரசுக் கட்சி அரசியல் குழு தீர்மானம்**

வவுனியா, ஜனவரி 31

வடக்கு மாகாண முதலைமச்சர் வேட்பாளராக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவைக் களமிறக்கவேண்டும் என தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றுத் தீர்மானித்தது.

02

## டொமினிக் ஜீவாவுக்கு கொரோனா தொற்று!

கொழும்பு, ஜன.31

இலங்கையின் மூத்த எழுத்தாளர் டொமினிக் ஜீவா தனது 94 ஆவது வயதில் கடந்த 28 ஆம் திகதி காலமானார். அவருக்கு மேற்

02

## கண்துடைப்பு நாடகத்துக்கு மீண்டும் இலங்கை முயற்சி

**சாடுகின்றார் சுமந்திரன் எம்.பி**



வவுனியா,ஜன.31

இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தை மீண்டும் ஏமாற்றுவதற்காகவே புதிய ஆணைக்குழுவொன்றை நியமித்து கண்துடைப்புச் செய்கின்றது எனச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கோட்டாபய ராஜபக்‌ஷ அரசாங்கத்தின் செயல்பாடுகளைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

02

## துறைமுக சேவை அத்தியாவசியம்

**ஜனாதிபதி பிரகடனம்**

கொழும்பு, ஜன.31

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பிரகடனப்படுத்தியுள்ளார். அதிவிசேட வர்த்தமானி மூலம் துறைமுக சேவையை ஜனாதிபதி அத்தியாவசிய சேவையாக் கியுள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதியின் செயலா ளர் பி.பீ.ஜயசுந்தரவின் கையெழுத்துடன் இந்த வர்த்த மானி நேற்று இரவு வெளியிடப்பட்டது. (அ-எ)

## கொரோனா உயிரிழப்பு 313ஆனாது

கொழும்பு, ஜன 31

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்

15

## பௌத்த தேரர்களின் கருத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்

**அரசுக்கு ஞானசாரதேரர் அறிவுரை**



கொழும்பு,ஜன.31

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் பௌத்த மதத்தலைவர்கள் ஒருமித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். தனிச் சிங்கள தலைவர் தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிக்க பௌத்த தேரர்கள்

02

## இரண்டாம் நாளான நேற்று 32,539 பேருக்கு தடுப்பூசி

கொழும்பு, ஜன.31

இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா செனேகா கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

முதலாம் நாளான நேற்று முன்தினம் 2280 சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று 32 ஆயிரத்து 539 சுகாதார ஊழியர்களுக்கு தடுப்பூசி

02

## 2,997 மருத்துவ சேவையாளர்களுக்கு வடக்கில் நேற்று கொரோனா தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜன.31

வடக்கு மாகாண வைத்தியசாலைகள் மூலம் மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொரோனா தடுப்பூசி மருந்து வழங்கும் நடவடிக்கையில் நேற்று முதல் நாளில் 2 ஆயிரத்து 997 சேவையாளர்கள் தடுப்பூசி பெற்றுள்ளனர். இது 30 சதவீதத்தினர் ஆகும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள்

02

## ஐ.நா. ஆணையாளர் அலுவலகத்துடன் இறுதித் தருணத்தில் இலங்கை பேசும்

ஜெனிவா, ஜன.31

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வுக்கு முன்னர் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் கடைசி நிமிட பேச்சுவார்த்தையில் இலங்கை ஈடுபடும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தொடர்பில் மனித

02

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## கூட்டமைப்பின்...

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்குழு வவுனியாவில் நேற்று கூடியது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவே போட்டியிடவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்மொழிந்தார். சீ.வீ.கே.சிவஞானம் அதை வழிமொழிந்தார்.

இதன்போது எவரும் அந்த தீர்மானத்தை எதிர்க்கவில்லை. குறிப்பாக சுமந்திரன் இதன்போது வாயே திறக்காமல் மௌனமாக இருந்தார்.

எதிர்ப்பின்றி அந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குள் நீண்ட நாட்களாக நிலவிய குழு மோதல்கள் முடிவுக்கு வரும் அறிகுறிகள் நேற்றைய கூட்டத்தில் தென்பட்டன.

குழு மோதல்களை முடிவுக்கு கொண்டு வர, மாவை- சுமந்திரன் மோதலை தீர்த்து வைக்க நேற்று மேற்கொள்ளப்பட்ட முயற்சி ஓரளவு பலனை கொடுத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

நேற்றைய அரசியல் குழு கூட்டத்தில் இரா.சம்பந்தன், முன்னாள் செயலாளர் கி.துரைராசசிங்கம், எக்ஸ்.குலநாயகம் உள்ளிட்ட நான்கு பேர் சமூகமளிக்கவில்லை.

இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்ட போதும், முக்கியமாக மாவை- சுமந்திரன் மோதலை முடிவுக்கு கொண்டு வரும் நடவடிக்கைகள் தென்பட்டன.

கடந்த தேர்தலுடன் எம்.ஏ.சுமந்திரன் தரப்புடன் செயற்பட்ட சி.சிறிதரன் இந்த முயற்சியை ஆரம்பித்தார். அநேகமாக, சிறிதரன் பேசிய சந்தர்ப்பங்களில் எம்.ஏ.சுமந்திரன் பேசவில்லை. சுமந்திரன் தரப்பின் பிழைகள் என்றும் சிலவற்றை சிறிதரன் சுட்டிக்காட்டினார். அப்போதும் சுமந்திரன் பேசவில்லை. சுமந்திரன் தரப்பு குரலாக சிறிதரன் பேசியதாக ஊகிக்க முடிந்ததாக, கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குறிப்பிட்டனர்.

இரண்டு தரப்பின் மோதல் பின்னணிக் காரணங்களை சிறிதரன் குறிப்பிட்டார். தலைமைக்கு எதிரான, விமர்சனக் கருத்துக்களை சுமந்திரன் பகிரங்கமாக பேசியது தவறு, அதேபோல தலைமையும் சில விடயங்களைக் கட்சிக்குள் ஆலோசித்து செயற்பட்டிருக்கவேண்டுமென்றார்.

அத்துடன், தானும் ஒரு தவறு செய்துவிட்டதாக சிறிதரன் தெரிவித்தார். கட்சித் தலைமையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக பகிரங்கமாக கூறியது தவறானதுதான் என்பதை ஏற்றுக்கொள்கிறேன் என்றார்.

உள்கட்சி மோதல்களை முடித்து, ஒற்றுமையாக எதிர்வரும் காலங்களில் செயற்படுவதென்றும் கூட்டத்தில் கருத்துக்களை தெரிவித்தனர்.

மோதலை முடிவுக்கு கொண்டு வரும் இன்னொரு அஸ்திரத்தையும் சிறிதரன் வீசினார். எதிர்வரும் வட மாகாணசபை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசாவை களமிறக்குவதென்றும், அவரை வெற்றியடைய தாம் அனைவரும் முழு முயற்சி செய்வோம் என்றும் தெரிவித்தார். இதையும் சுமந்திரன் ஆட்சேபிக்கவில்லை. சிறிதரனின் கருத்தை சீ.வீ.கே.சிவஞானம் வழிமொழிந்தார்.

மாவை சேனாதிராசா தேர்தலில் போட்டியிடா விட்டால் நான் போட்டியிடுவேன் என கூறியிருந்தேன். ஆனால், மாவை சேனாதிராசாதான் வேட்பாளர் என்பதை நானே ஆரம்பத்திலிருந்து பிரேரித்து வருகிறேன். அவர் போட்டியிட்டால் அதை முழுமையாக ஆதரிப்பேன். அவரே வேட்பாளர் என்பதை நானும் ஆதரிக்கிறேன் என்றார் சிவஞானம். யாரும் அதை எதிர்க்கவில்லை.

அத்துடன், ஜெனீவா விவகாரம், சிவில் சமூகமென்ற பெயரில் விடுக்கப்பட்ட போராட்ட அறிவிப்பு பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

கட்சியின் மத்தியகுழு கூட்டத்தை அடுத்த மாத இறுதிக்குள் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## கொரோனா...

டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 313 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 300 பேர் கொரோனாவின் மூன்றாவது அலையில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

## டொமினிக்...

கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் அவரது சடலம் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பொரளையில் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய தகனம் செய்யப்பட்டது. டொமினிக் ஜீவா, முதுமை மற்றும் உடல்நலக்குறைவால் கடந்த வியாழனன்று கொழும்பில் காலமானார்.

1940 ஆம் ஆண்டளவில் எழுத்துத் துறையில் கால் பதித்த டொமினிக் ஜீவா ஈழ இலக்கியத்தின் தவிர்க்க முடியாத ஆளுமையாவார். (அ-எ)

## பௌத்த தேரர்களின்...

முன்னின்று செயல்பட்டுள்ளனர். எனவே அரசாங்கம் பௌத்த தேரர்களின் கருத்துக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

கிரிலப்பனையிலுள்ள பொதுபல சேனாவின் காரியாலயத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசிய வளங்களைப் பாதுகாப்போம், பிற நாட்டவர்களுக்கு அவற்றைத் தாரை வார்க்க மாட்டோம் என்பது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான தேர்தல் பிரசாரமாக காணப்பட்டது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்விடயங்களை தனது கொள்கைத்திட்டத்தில் வெளியிட்டார். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரம் 2020 ஆம் ஆண்டுக்குப் பிறகு பேசப்படும் விடயமல்ல. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலத்திலிருந்து இவ்விடயம் பேசப்படுகிறது.

கிழக்கு முனைய விவகாரம் தற்போது அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. இவ்விடயத்தைக் கொண்டு அரசாங்கத்துக்குள் பல அரசாங்கங்கள் தோற்றம் பெற்றுள்ளன. அமைச்சர்கள் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களை அரசாங்கத்தின் கருத்தாக ஊடகங்களில் தெரிவிக்கின்றனர். இவ்விடயம் அரசாங்கம் தொடர்பில் தவறான நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும்.

பௌத்த மத தலைவர்கள் தங்களின் நிலைப்பாட்டை அரசாங்கத்துக்கு ஒருமித்து அறிவிக்க வேண்டும். பீட அடிப்படையில் பௌத்த தேரர்களிடம் வேறுபட்ட நிலைப்பாடு காணப்படலாம். ஆனால் நாடு என்ற ரீதியில் ஒருமித்த கொள்கை காணப்படுகிறது. தனிச் சிங்களத் தலைவர் தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவிக்க பௌத்த தேரர்கள் முன்னின்று செயல்பட்டுள்ளனர். ஆகவே அரசாங்கம் பௌத்த தேரர்களின் கருத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

கிழக்கு முனைய விவகாரம் தொடர்பில் அரசியல்வாதிகள் தங்களின் தனிப்பட்ட கருத்து தெரிவிப்பதை முதலில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி நாட்டு மக்களுடன் கலந்துரையாட வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மகாநாயக்க தேரர்கள் மூலம் முன்னெடுத்துள்ளோம்- என்றார். (அ-எ)

## 2,997 மருத்துவ...

பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் தடுப்பூசி மருந்து வழங் கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயி ரத்து 944 சுகாதாரத் துறை சேவையா ளர்கள் தகுதி பெற்றனர்.

மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் இந்தப் பணியில் முதல் நாளான நேற்று 2 ஆயிரத்து 997 பேர் கொரோனா தடுப்பூசி மருந்தைப் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்து 586 பேரும், கிளிநொச்சியில் 290 பேரும், மன்னாரில் 448 பேரும், வவுனியாவில் 360 பேரும், முல்லைத் தீவில் 313 பேரும் நேற்று கொரோனா தடுப்பூசி மருந்தைப் பெற்றனர்.

இரண்டாவது நாள் தடுப்பூசி மருந்து வழங்கல் இன்று முன்னெடுக்கப்படும்- என்றார். (அ-எ)

## கண்துடைப்பு...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் செயல்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா உட்பட அரசியல் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் சுமந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஜெனிவா தீர்மானத்திலிருந்து விலகுவதாக எழுத்து மூலம் அறிவித்த இலங்கை அரசாங்கம், புதிய ஆணைக் குழுவை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு ஆணைக்குழுவை நியமித்து சர்வதேசத்தை ஏமாற்றவே அரசாங்கம் முயற்சிக்கின்றது. பிரச்னைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தெளிவாகக் கூறுவதை நடைமுறைப்படுத்தவேண்டும்.

இதேவேளை, இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்கின்றது. சுதந்திர தின நிகழ்வில் கூட்டமைப்பு பங்கெடுத்துக் கொள்ளாது. நல்லாட்சியின் சமிஞ்ஞைகளுக்கு மதிப்பளித்து சுதந்திர தினத்தில் பங்கேற்றோம்-என்றார். (அ-எ)

## இலங்கை...

உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக யுத்தம் முடிவடைந்த காலத்திலிருந்து பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உரிய பொறிமுறையின் அடிப்படையில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைக் கையாள வகுக்கப்பட்ட திட்டங்களை 2015 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த நல்லாட்சி அரசாங்கம் செயல்படுத்தவில்லை.

மனித உரிமைகள் பேரவை விவகாரம் கூட அரசியல் பழிவாங்கலுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. 30- 1 பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்குவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அரச தலைவருக்கும், பாராளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் இணக்கம் தெரிவித்தமை தேசத்துரோகச் செயல்பாடாகவே கருதப்படவேண்டும்.

30/1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அரசமைப்புக்கு முரணானது. 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது 30/1 பிரேரணையிலிருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகியது.

இந்தத் தீர்மானத்தை அரசாங்கம் சுயாதீனமான முறையில் எடுத்தது. பெப்ரவரியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை இலங்கையின் சுயாதீனத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இம்முறை திருத்தியமைக்கப்படும். உள்ளகப் பிரச்னையை சர்வதேச அரங்குக்கு கொண்டு சென்று ஒரு தரப்பினர் இலாபமடைகிறார்கள். இதனால் சாதாரண தமிழ் மக்களுக்கு எந்தவிதப்பயனும் கிடைக்கப் பெறவில்லை- என்றார். (எ)

## இரண்டாம்...

வழங்கப்பட்டது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை மொத்தமாக 37 ஆயிரத்து 825 பேருக்கு கொரோனா தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-எ)

## ஐ.நா. ஆணையாளர்...

உரிமைகளுக்கான ஆணையாளர் மிசெல் பச்லெட், வெளியிட்டுள்ள மோசமான அறிக்கை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளது என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாங்கள் மனித உரிமைகளுக்கான ஆணையாளரின் அலுவலகத்துடன் சில விவாதங்களை நடத்தி வருகின்றோம். ஐ.நா. ஆணையாளர் எழுப்பிய விடயங்களில் ஒருவித உடன்பாட்டை எட்ட முயற்சிக்கிறோம்.

அந்தவகையில் இந்த விடயங்களில் முறையான பதிலை நாங்கள் நிச்சயம் வெளியிடுவோம்-என்று கூறின.

கடந்த 27ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் வெளியிட்ட அறிக்கையில், “இலங்கையில் மோசமடைந்து வரும் மனித உரிமை நிலைமையால் நான் அச்சமடைந்துள்ளேன். ஆகவே தான் எதிர்காலத்தில் இவ்வாறான மனித உரிமை மீறல்களைத் தடுக்க மனித உரிமைகள் பேரவை எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை வகுத்துள்ளேன். மேலும் உலகளாவிய அதிகார வரம்பின் கொள்கையின் கீழ் சர்வதேச நீதிமன்றங்களில் இலங்கை குற்றவாளிகள் எனக் கூறப்படுபவர்களின் வழக்குகளைத் தொடர்வதன் ஊடாகவும் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக பயணத் தடைகள் மற்றும் சொத்து முடக்கம் உள்ளிட்ட தடைகளை விதிப்பதன் ஊடாகவும் நடவடிக்கை எடுக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும்.

இதேவேளை, பொறுப்புக்கூறல் உட்பட இலங்கையின் நிலைமையை ஆணையாளர் அலுவலகத்தின் கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடலை மேம்படுத்தவும் எதிர்கால பொறுப்புக் கூறல் செயல்முறைகளுக்கான ஆதாரங்களை சேகரித்துப் பாதுகாக்கவும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களுக்காக வாதாடவும் அர்ப்பணிப்புத் திறனை ஆதரிக்கவும் மனித உரிமை பேரவை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்“ என அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் இலங்கை தனது நிலைப்பாட்டையும், ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையின் தீவிரத் தன்மையை வலுவிலக்க செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. (அ-எ)

ஈழநாடு
Eelanadu
31.01.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, தை 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் மக்களுக்கு என்ன தேவை?

அனைவரது பார்வையும் ஜெனிவாவின் மீது மட்டுமே இருக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரது அறிக்கை தந்த உற்சாகத்தில் சிலர் புத்துணர்ச்சி பெற்றிருக்கின்றனர். புலம்பெயர் சூழலில் இயங்கும் சில குழுக்களோ, குறித்த அறிக்கையை தங்களது லொபிக்கு கிடைத்த வெற்றியென்றே கருதுகின்றனர். ஆனால் அறிக்கையை ஆழமாக வாசித்தால் ஒரு விடயம் தெளிவாகும். அதாவது, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு வாசகமும் அங்கில்லை. இதற்கு யார் காரணம்?

ரணில் அரசாங்கத்தினால் இணையனுசரனை வழங்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட 30/1 தீர்மானத்திலும் அரசியல் தீர்வு தொடர்பில் 13ஆவது திருத்தச்சட்டமே வலியுறுத்தப்பட்டிருந்தது. 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக, தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் அனைத்து பிரச்னைகளையும் தீர்த்துவிட முடியுமென்றால், தமிழர் தரப்புக்கள் தங்களின் ஆற்றலை ஜெனிவாவில் விரயம் செய்வது வீணாகும். ஏனெனில் அதற்கான அழுத்தம் புதுடில்லியிலிருந்துதான் வரவேண்டும். ஆனால் தமிழ் மக்களின் பிரச்னைகளை முற்றிலுமாக தீர்ப்பதற்கு, 13ஐ தாண்டிச் செல்லவேண்டுமென்றே, தமிழ்த் தேசிய தரப்புக்கள் தொடர்சியாக வலியுறுத்திவருகின்றன. ஆனால் தாண்டிச் செல்வதென்றால் என்ன? எவ்வாறு?

எங்களுக்கு என்ன தேவையென்பதை சர்வதேச அரங்குகளில் தமிழர்களால் சொல்ல முடியவில்லையா? அல்லது சொல்லத் தெரியவில்லையா? ஜெனிவா விவகாரம் தொடர்பான ஆரம்பநிலை கலந்துரையாடல்களின் போது, ஒரு விடயம் சிலரால் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதாவது இம்முறை முன்வைக்கப்படவுள்ள பிரேரணையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான அரசியல் கட்டமைப்பொன்றை வலியுறுத்த வேண்டும். 30/1 தீர்மானத்தில் 13ஆவது திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டது போன்று – இம்முறை வரவுள்ள தீர்மானத்தில் சமஷ்டி என்பதை உள்ளடக்குமாறு நாம் கோரிக்கையொன்றை முன்வைப்போம். தற்போதைய அரசாங்கம் எதனையுமே ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற நிலையில், சமஷ்டியை வலியுறுத்துவதற்கான சந்தர்ப்பமாக இதனை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம். ஒருவேளை இலங்கை அரசாங்கம் 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்கினால் கூட, தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்வு விவகாரத்தை, நாம் தொடர்ந்தும் சர்வதேச அரங்குகளில் பேசுபொருளாக்கலாம். அதற்கான அடிப்படையாக பேரவையின் பிரேரணையை பயன்படுத்தலாம். இது ஒரு சிறந்த யோசனை. ஆனால் புலம்பெயர் சூழலில் தனிநாட்டுக் கோரிக்கையை தாங்கிப் பிடிப்பவர்களாக தங்களை கருத்திக் கொள்ளும் ஒரு சிறிய குழுவினர், அதனை மறுதலித்து, அந்த யோசனையை ஆணையாளரிடம் பரிந்துரைப்பதையும் தடுத்தனர். இதன் காரணமாக ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயம் வெற்றிடமாகவே விடப்பட்டது.

தமிழ் மக்களுக்கு என்ன தேவையென்பதை ஒரு சர்வதேச அரங்கில் தெளிவாகவும் உறுதியாகவும் கூறமுடியாத நிலையிலேயே தமிழர் தரப்புக்கள் இருக்கின்றன. 30/1 தீர்மானத்தின்படி, இலங்கை அரசாங்கம், 13ஆவது திருத்தச்சட்டத்தை தாண்டிச் செல்லவேண்டிய எந்தவொரு நியாயபூர்வமான கடப்பாடும் இல்லை. உண்மையில் கடந்த அரசாங்கம் புதியதொரு அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான கடப்பாட்டை கொண்டிருக்கவில்லை. ஆனாலும் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தனது உரையில் புதியதொரு அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான முயற்சியை வலியுறுத்தியிருந்தார்.

வரவுள்ள புதிய பிரேரணையிலும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் எதுவும் இருக்கப்போவதில்லை. ஒருவேளை 13 மீளவும் இடம்பெறலாம். அரசாங்கம் புதியதொரு அரசியல் யாப்பு தொடர்பில், ஒரு வாக்குறுதியை வழங்கவும் கூடும். ஆனால் அது இன்னும் ஆபத்தாகவே முடியும். ஏனெனில், 13ஆவது திருத்தச்சட்டத்தையே நீக்கவேண்டுமென்று ஒரு தரப்பினர் கூறிவருகின்ற நிலையில், புதிய அரசியல் யாப்பு எவ்வாறு தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கும்?



# புலிகளை இலங்கை வெல்வதற்கு இந்தியாவுடனான உறவே காரணம்!

தமிழீழ விடுதலைப் புலிகள் இலங்கை நிலப்பரப்பில் தோற்கடிக்கப்பட்டதற்கு இந்தியாவின் நெருங்கிய உறவே காரணம் என ஜனாதிபதியின் மூத்த ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கோவிட் தடுப்பூசிகளை செலுத்தும் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை வெற்றி கொள்வதற்கு, அப்போதைய பாதுகாப்பு செயலாளராக கடமையாற்றிய கோட்டாபய ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி செயலாளராக இருந்த தான் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்தியாவுடன் நெருங்கி செயற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவுடனான பேச்சுவார்த்தைகளின் போது, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரண்டு தரப்பினரும் ஒரே விதமான நிலைப்பாட்டை கொண்டிருந்ததாக அவர் பேசினார்.

யாராலும் வெற்றிகொள்ள முடியாது என அனைவரும் தெரிவித்த போரை, இந்தியாவின் உதவியுடன் தாங்கள் வெற்றி கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், தற்போது கண்களுக்கு தெரியாத போரொன்றை முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிடுகின்றார்.

இந்த கண்ணுக்கு தெரியாத போரிலும் இந்தியா தனது உதவிகளை இலங்கைக்கு வழங்கி வருவதாக அவர் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, இந்தியாவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட் தடுப்பூசியை செலுத்தும் நடவடிக்கையை இலங்கையர்கள் கொண்டாட வேண்டும் என அவர் கூறுகின்றார்.

இந்தியாவினால் இலங்கைக்கு ஐந்து லட்சம் டோஸ் கொவிட் தடுப்பூசிகள் கடந்த 28ஆம் திகதி நன்கொடையாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் (ஜனவரி 29) அலுவல்பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்தியாவினால் வழங்கப்பட்ட கொவிட் தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக சீனாவினால் அடுத்த மாதம் மூன்று லட்சம் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கைக்கான சீன தூதரகம் அண்மையில் அறிவித்திருந்தது.

இலங்கையில் கொவிட் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தகுதியான அனைவருக்கும், இந்த ஆண்டு இறுதிக்குள் தடுப்பூசிகளை வழங்க முடியும் என கோவிட் தடுப்பூசி தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவரும், ஜனாதிபதியின் மூத்த ஆலோசகருமான லலித் வீரதுங்க தெரிவிக்கின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



# 9 உள்ளூராட்சி உறுப்பினர்கள் முன்னணியை விட்டு நீக்கம்!

## மணிவண்ணனை ஆதரித்ததால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.31

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் மேலும் 9 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் விசாரணையின்றி கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர்.**

வி.மணிவண்ணன் தரப்புடன் இணைந்து செயற்பட்டார்கள் என்பதால் அவர்கள் கட்சியை விட்டு நீக்கப்பட்டனர்.

யாழ்.மாநகர சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் 13 பேரில் 10 பேர் வி.மணிவண்ணனை ஆதரிக்கிறார்கள்.

அண்மையில் நடந்த யாழ் மாநகரசபை முதல்வர் தெரிவில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்கள் வி. மணிவண்ணனை ஆதரித்தனர்.

இவர்களில் 4 பேர், கட்சி கட்டுப்பாட்டை மீறினார்கள் என குறிப்பிட்டு, ஏற்கனவே கட்சியினால் நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கையடுத்து, நீக்கத்திற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எஞ்சிய 6 பேரும் நேற்று கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர்.

வரதராஜன் பார்த்தீபன், சிவசாந்தன் தனுஜன், இ.ஜனன், பா.பத்மமுரளி, அ.சுபாஜினி, இ.ஜெயசீலன் ஆகியோரே கட்சியை விட்டு நீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நல்லூர் பிரதேசசபை உறுப்பினர்கள் மூவரையும் கட்சியை விட்டு நீக்கியுள்ளது முன்னணி.

தற்போதைய தவிசாளரர் ப. மயூரன், அகிலாண்டரூபி, கௌசலா ஆகியோரே நீக்கப்பட்டுள்ளனர்.




**மேடம்**
தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள். தொழில் முயற்சியில் இருந்த குறுக்கீடுகள் அகலும். வாக்கை காப்பாற்ற கொள்கை பிடிப்போடு செயல்படுவீர்கள்.

**இடபம்**
விரோதிகள் விலகும் நாள். இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். தொலைபேசி தகவல் தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

**மிதுனம்**
நண்பர்களின் ஆதரவு கிடைக்கும் நாள். அதிகாலையிலேயே ஆதாயம் தரும் தகவல் வரலாம். வருமானம் திருப்தி தரும். அரைகுறையாக நின்ற பணி தொடரும்.

**கடகம்**
இனிய சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும் நாள். ஏட்டிக்கு போட்டியாக செயல்பட்ட உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர்.

**சிம்மம்**
ஆதரவுக்கரம் நீட்ட உறவினர் முன்வருவர்.அடுத்தவரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்லவிதமாக நடைபெற்று மகிழ்ச்சியைத் தரும்.

**கன்னி**
பயணங்களால் பலன் கிட்டும் நாள். ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை. முன் கோபத்தை தவிர்ப்பது நல்லது. உறவினர் இல்லம் வந்து உதவுவர்.

**துலாம்**
சவால்களை சமாளிக்கும் நாள். சான்றோர்களின் சந்திப்பு உண்டு. மருத்துவ செலவுகள் குறைந்து மன நிம்மதியைத் தரும். திறமைகள் வெளிப்படும்.

**விருட்சிகம்**
காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள். தொழிலில் எதிர்பார்த்ததைவிட கூடுதல் வருமானம் உண்டு. தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள்.

**தனுசு**
பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும் வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும். மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்**
காரிய வெற்றிக்கு கலந்து ஆலோசித்துச் செயல்பட வேண்டிய நாள். பொருட்களை கவனமாக கையாள்வது நல்லது. உடல் நலனில் அச்சுறுத்தல் தோன்றும்.

**கும்பம்**
சொல்லை செயலாக்கி காட்டும் நாள். துணிந்து எடுத்த முடிவால் தொழில் வளர்ச்சி உண்டு. கொடுத்த பணம் வந்து சேரும். விவாக பேச்சுகள் முடிவாகலாம்.

**மீனம்**
இனிமையான நாள். எடுத்த காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். திருமண வாய்ப்புகள் கைகூடிவரலாம். தொழில் ரீதியாக புதிய அனுபவங்கள் ஏற்படும்.

# பொதுமக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம்

## ஜனாதிபதி கோட்டாபய அழைப்பு

கொழும்பு, ஜன. 31

நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டு செல்வதற்காக அரச தலைமைகளும் பொது மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமத்துடனான உரையாடல் விசேட வேலைத்திட்டத்தின் 8 ஆவது திட்டம் மொனராகலை மாவட்டத்தின் தனமல்வில பகுதியில் இடம்பெற்றது.



நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

பொதுமக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 31

தெமட்டகொட பிரதேசத்தில் 510 மில்லி கிராம் ஹெரோஹினை மகிழுந்தியில் கடத்தி சென்ற ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த போதைப்பொருள் கடத்தல், களுத்துறை சிறைச்சாலையில் உள்ள போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவரின் உதவியாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனை பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

# மேலும் 879 பேர் குணமடைவு

கொழும்பு, ஜன. 31

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து 879 குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 56 ஆயிரத்து 277 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 62 ஆயிரத்து 445 ஆக காணப்படுகின்றது.

இதில் 5 ஆயிரத்து 863 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 859 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால்இதுவரை 305 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோசமான கடன் நெருக்கடிக்குள் இலங்கை தள்ளப்படும் ஆபத்து

## சம்பிக்க எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு,ஜன.31

வெளிநாட்டுக் கடன் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 7000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச கடன்களைச் செலுத்த வேண்டியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக மோசமான கடன்நெருக்கடியில்இலங்கை தள்ளப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: வெளிநாடுகளுடன் டொலர்களில் செய்யும் கணக்கு வழக்குகளை மூன்று மாத காலத்துக்குள் நிறுத்துமாறு சகல வங்கிகளுக்கும் மத்திய வங்கி அறிவித்தல் ஒன்றை வழங்கியுள்ளது. ஏனென்றால் வெளிநாடுகளிடம் டொலர்களில் பெற்றுக் கொண்ட கடன்களைச் செலுத்த வேண்டிய நிலையில் கடந்த ஆண்டில் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே நாட்டிலுள்ள சகல வங்கிகளில் இருந்தும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுத்தருமாறு மத்தியவங்கி தெரிவித்திருந்தது. இது நூறுக்கு ஒரு வீத வட்டிவீதத்தில் தருமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் எந்தவொரு வங்கியும் ஒரு வீத வட்டிக்கு பணத்தை வழங்க முன்வரவில்லை. அதனால் 44 மில்லியன் அமெரிக்க டொலர்களையே அரசாங்கத்தால் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனவே சர்வதேச கடனை இறக்குமதிக்காக வைத்திருந்த பணத்தில் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது.

அதேபோன்று ரூபாவின் விலை வீழ்ச்சி கண்டதால் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தி ரூபாவின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டியதாகிவிட்டது.



மத்திய வங்கியால் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் சந்தைக்குக் கொடுத்ததன் மூலமாகவே இப்போது ரூபாவின் விலை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பணமெல்லாம் நல்லாட்சி அரசாங்கத்தில் சேமிக்கப்பட்ட பணம் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இவ்வாறான பயணத்தை முன்னெடுத்து நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. அரசாங்கத்துக்கு மிக நெருக்கடியான நிலைமையே இன்று காணப்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தில் உள்ள எவருக்கும் இந்தப் பிரச்னைகள் விளங்கவில்லை- என்றார். (எ)

# குருந்தூர்மலை விவகாரம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு, ஜன. 31

**முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையிலிருந்த தமிழர் களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமலாக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

அத்துடன், இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, அவரோடு சேர்ந்தவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றையும் தொடரவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குருந்தூர் மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக வழக்கொன்றைத் தொடர்வது குறித்து, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் நேற்று சுமந்திரனுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பு, வவுனியாவிலுள்ள தமிழரசுக் கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றது. வழக்குத் தொடர்வதற்காக சில ஆவணங்களும் சுமந்திரனிடம் கையளிக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன், “குருந்தூர் மலையில் இருந்த சூலம் உடைக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக துரைராசா ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சார்ள்ஸ் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்ட பின்பு, ரவிகரன் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து நேற்று முன் தினம் பொலிஸாரோடு குருந்தூர் மலைக்குப் போய் உடைக்கப்பட்ட தடயங்கள் எல்லாவற்றையும் ரவிகரன் காண்பித்துள்ளார். இதையடுத்து, அங்கிருந்த தமிழர்களின் வழிபாட்டு இடம் உடைக்கப்பட்டமை ஊர்ஜிதமாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றை நாங்கள் தாக்கல் செய்யவுள்ளோம்.

ஏற்கனவே, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தினால் கொடுக்கப்பட்ட உத்தரவினை மீறிச் செயற்பட்டமை தொடர்பாக நீதிமன்றினை அவமதித்த வழக்கொன்றும் மேன்முறையிட்டு நீதிமன்றில் நாங்கள் உடனடியாகத் தாக்கல் செய்வோம். இது இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவிற்கும் அவரோடு சேர்ந்தவர் களுக்கும் எதிராக தாக்கல் செய்யப்படும்-என்றார்.



# 500 இராணுவத்தினருக்கு வவுனியாவில் தடுப்பூசி

வவுனியாவில் அமைந்துள்ள வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் 500 இராணுவத்தினருக்கு கொரோனா தடுப்பூசிகள் நேற்று ஏற்றப்பட்டன.

இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொவிட்-19, “கொவிஷீல்ட்” தடுப்பூசிகள் வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பாதுகாப்பு படையினருக்கு ஏற்றும் பணி நேற்று தொடக்கம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 டோஸ்கள் தடுப்பூசி மருந்துகள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன. அதனை ஏற்றும் பணிகள் வவுனியாவில் அமைந்துள்ள வைத்தியசாலைகளில் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள வன்னி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் உள்ள இராணுவத்தினர் 500 பேருக்கு நேற்று கொரோனா தடுப்பு ஊசிகள் ஏற்றப்பட்டிருந்தது.

## சிறைச்சாலைக் கொத்தணி:

# தொற்றாளர் எண்ணிக்கை 230ஆகக் குறைவடைந்தது!

கொவிட்-19 சிறைக் கொத்தணியின் எண்ணிக்கை இன்று 230ஆகக் குறைந்துள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

224 கைதிகளும் 6 அலுவலர்களும் இன்னும் பராமரிப்பில் உள்ளனர் என பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

சிறைக் கொத்தணியிலிருந்து 135 சிறை அலுவலர்கள் உட்பட மொத்தம் 4520 பேர் தொற்றாளர்களாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்புத்துறைமுக கிழக்கு முனையம்:

# நாடு முழுக்க போராட்டம் நடத்த தயாராகி வருகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன் 31

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிராக நாடு பூராகவும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தீர்மானித்துள்ளது.

தமது போராட்டத்தின் ஆரம்பகட்டமாக எதிர்வரும் முதலாம் திகதி தமது தொழிற்சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து நாடு பூராகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளங்களையும், சொத்துக்களையும் வெளிநாடுகளுக்கு விற்பதற்கு அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது எனவும், கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை விற்கும் அரசின் முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கு அனைத்து வழிகளிலும் நடவடிக்கை எடுப்போம் எனவும் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் பவித்ராவுக்கு செயற்கைச் சுவாசம்!



கொழும்பு, ஜன. 31

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ள சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டுள்ளது.

எனினும், சுகாதார அமைச்சர் ஆபத்தான நிலையில் இல்லை என்று அவரது கணவர் காஞ்சன ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சருக்கு சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதால்தான் செயற்கை சுவாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் குணமடைந்து வருகின்றார். அவருக்கு அதிக காய்ச்சல் காரணமாக மருத்துவர் கண்காணிப்பில் உள்ளார் எனவும் காஞ்சன ஜெயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.


கடந்த 23 ஆம் திகதி சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. இதையடுத்து அவர் கொக்கலை சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தார்.

அவர் மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் கொழும்பு தேசிய தொற்று நோய் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை, சுகாதார அமைச்சரின் கணவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கவனயீர்ப்புப் போராட்டம் வெற்றி பெற தமிழ் மக்கள் ஆதரவு வழங்கவேண்டும்

## விக்னேஸ்வரன் எம்.பி. கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 31

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்த வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் முடிவெடுத்துள்ளன. மட்டக்களப்பில் இருந்து சீலனும் (திரு.சிவயோகநாதம்) கிளிநொச்சியில் இருந்து கலாவும் (திருமதி.கனகரஞ்சினி) இது சம்பந்தமாக எமது ஆதரவைக் கோரியுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் க.வி .விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தமிழர்கள் வெறுமனே பேச்சோடு மட்டும் நின்று விடாமல் அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டியுள்ளது. போராட்டங்களை யார் பின்னின்று நடத்துகின்றார்கள் என்பதிலும் பார்க்க யாருக்கு எமது நிலை பற்றித் தெரியப்படுத்தலாம் என்பதையே எமது குறிக்கோளாக வைத்து காய்களை நகர்த்த வேண்டும்.

2015ஆம் ஆண்டு எமது இனப்படுகொலை பிரேரணையை வடமாகாண சபை நிறைவேற்றியதும் அதனால் பதற்றப்பட்டவர்களில் ஒருவர் சுமந்திரன். இன்று அவர் மாறிவிட்டார். அவர் இந்த மக்கள் சார் சிவில் நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார். அவரை அவ்வாறு மாற்றியது எமது மக்களே.

மக்கள் மனம் வைத்தால் எதனையும் நாம் பெறலாம்.

ஆகவே மக்கள் மன எழுச்சியாக நடைபெறவிருக்கும் கவனயீர்ப்புப் போராட்டம் வெற்றிகரமாக இடம்பெற எமது தமிழ் மக்கள் யாவரும் தமது மனமுவந்த ஆதரவை அவர்களுக்கு நல்க வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்-என்றார்.



# முல்லை சுகாதாரப் பிரிவினருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும்பணி

முல்லைத்தீவு, ஜன. 31

அரசின் தீர்மானத்திற்கு அமைவாக நேற்று முதல் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை எல்லைக்கு உட்பட்ட அனைத்து சுகாதாரத்துறையினர், ஊழியர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றுக் காலை முல்லைத்தீவில் உண்ணாப்புலவு வைத்தியசாலையில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இதில் முதலாவதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் மு.உமாசங்கருக்கு தடுப்பூசி ஏற்றப்படத்தை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட தொற்று நோய் தடுப்புப் பிரிவு வைத்திய பொறுப்பதிகாரி வி.விஜிதரனுக்கும் தொடர்ந்து ஏனைய வைத்தியர்களும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

(அ)

# சம்பிக்கவுக்கு என்ன பதவி?

## கூடுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜன. 31

ஐக்கிய மக்கள் சக்தியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டம் பெப்ரவரி முதல் வாரத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது சில பதவிகள் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முதலாவது செயற்குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது தலைவர், செயலாளர், பொருளாளர், தவிசாளர் உட்பட மேலும் சில பதவிகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர்.

சம்பிக்க ரணவக்கவுக்கு சிரேஷ்ட உப தலைவர் பதவி வழங்குவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டாலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே அடுத்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்படவுள்ளது.

# மரண அறிவித்தல்

## திரு. இராமலிங்கம் சிவராசா



தோற்றம் : - 03.01.1943
மறைவு : - 29.01.2021

யாழ். பளை, முகமாலையைப் பிறப்பிடமாகவும், நெளுக்குளம், கிளிநொச்சி D8 உருத்திரபுரம் ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவராசா அவர்கள் 29-01-2021 வெள்ளிக்கிழமை அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் இராசம்மா தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற தங்கரத்தினம் அவர்களின் அன்பு கணவரும், சிவகுமார் (இலங்கை), சியாமளா (ஜேர்மனி), சசிகுமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும், சுவர்ணலதா, சச்சிதானந்தம், ஜெயகௌரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, பஞ்சாச்சரமூர்த்தி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற யோகம்தா, குமாரசாமி, ஸ்ரீதரன் (நெதர்லாந்து), விஜயபவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிவானா, டிவாசன், சாயூரன், சர்மிலன், சாருஜா, சாதனா, சயானி, சர்விக்கா, சாருஜன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமை கிரியைகள் இன்று (31-01-2021) ஞாயிற்றுக்கிழமை வவுனியா நெளுக்குளம் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் நெளுகுளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
தொடர்புகளுக்கு
**சிவகுமார்** (மகன்) 0773421370

# கே.கே.எஸ் திஸ்ஸ விகாரைக்கு இராணுவத் தளபதி அடிக்கல்!

## 100 அடி உயரத்தில் கட்டுவதற்கு ஏற்பாடு

**யாழ்ப்பாணம், ஜன.31**

**வலி.வடக்கு தையிட்டியில் தனியார் காணியையும் இணைத்து திஸ்ஸ விகாரை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று சமய வழிபாடுகளுடன் முன்னெடுக்கப்பட்டது.**



100 அடி உயரத்தில் காங்கேசன்துறை திஸ்ஸ விகாரை அமைக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையில் நிரந்தக் கட்டடம் அமைக்க இடைக்காலத் தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் தையிட்டியில் திஸ்ஸ விகாரை அமைக்க நேற்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவால் அடிக்கல் நடப்பட்டுள்ளது.

இந்த விகாரை தனியார் காணியில் அமைக்கப்படவுள்ளது. அந்தக் காணி திஸ்ஸ விகாரைக்குரிய காணி என தெரிவிக்கப்பட்டபோதும் அதனுடன் இணைந்து தனியார் காணிகள் விடுவிக்கப்படாமல் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.



# சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி இரு யானைகள் மரணம்

கொழும்பு, ஜன. 31

பொலனறுவை-மெதிரிகிரிய - தஹம்வெள பகுதியில் சட்டவிரோத மின்சார இணைப்பில் சிக்கி மரணித்த இரண்டு காட்டு யானைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகள் அந்தப் பகுதியில் சட்டவிரோத மின்சார இணைப்புகளை பயன்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று அதிகாலை அந்த சட்டவிரோத மின்சார இணைப்பில் சிக்கி இறந்த நிலையில், இரண்டு காட்டு யானைகளின் சடலங்கள் மீட்கப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# விமானப்படை சிப்பாய் கைது

அம்பலாங்கொட உஸ்முதுலாவ கிராமிய வங்கியில் கொள்ளையில் ஈடுபட்ட 44 வயதான விமானப்படை சிப்பாய் ஒருவர் கிரனேட் மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் வங்கி முகாமையாளரை அச்சுறுத்திய பின் 136,000 ரூபா பணத்தை கொள்ளையிட்டார் என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேக நபர் வங்கியைக் கொள்ளையிட முகத்தை மூடிய தலைக்கவசம் மற்றும் ஜக்கெட் அணிந்து மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும் அவர் கூறினார்.

மேலும் இச்சந்தேக நபர் திருகோணமலையிலுள்ள விமானப் படை முகாமைச் சேர்ந்தவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலாளர்களுக்காக சேர்ந்து செயற்பட தயார்

## மலையக மக்கள் முன்னணி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 31

“பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கு எந்தவொரு தரப்புடனும் இணைந்து செயற்படுவதற்கு மலையக மக்கள் முன்னணி தயாராகவே இருக்கின்றது. தொழிலாளர் நலன்சார் விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குவதற்கும் தயாராகவே இருக்கின்றோம்” என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் -

மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பள விடயத்தில் அமைச்சரவை தொடர்ந்து பல தீர்மானங்களை எடுத்துவருகின்ற போதிலும் இதன் உண்மைத்தன்மை என்ன என்பதை தெளிவாக தெரிந்துகொள்ள முடியாமலுள்ளது

அதற்கு காரணம் மலையக மக்கள் சார்பாகவும் அவர்களுடைய கருத்துகளை அமைச்சரவையில் தெரிவிப்பதற்கும் அமைச்சர் ஒருவர் இல்லாமை பெரும் குறையாகும். ஏனெனில் இந்த விடயத்தில் தொழில் அமைச்சர் ஒரு கருத்தையும் ஏனைய அமைச்சர்கள் ஒரு கருத்தையும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் ஒரு கருத்தையும் கூறிவருகின்றனர்.

எனவே உண்மையான கருத்தை அறிந்து கொள்ள வேண்டுமாக இருந்தால் மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒரு இருக்கவேண்டியது கட்டாயமாகும்.மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இல்லாமை பெரும் குறையாகவே இருக்கின்றது.

1000 ரூபா அடிப்படை சம்பள விடயத்தில் எந்த தரப்பினருடனும் இணைந்து செயற்படுவதற்கோ அல்லது ஒத்துழைப்பு வழங்குவதற்கோ மலையக மக்கள் முன்னணியும் மலையக தொழிலாளர் முன்னணியும் தயாராகவே இருக்கின்றது. நாங்கள் தொழிலாளர் நலன் சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயாராகவே இருக்கின்றோம்.

எதிர்க்கட்சியில் இருக்கின்றோம் என்பதற்காக அனைத்தையும் எதிர்க்கவேண்டும் என்ற கொள்கையில் நானும் இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்டவிரும்புகின்றேன்.

இன்றைய சூழ்நிலையில் தொழிலாளர்களின் நலனுக்காக அனைவரும் இணைந்து செயற்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும் - என்றார்.

(அ)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் 3,000 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்படும்

## பணிப்பாளர் சத்தியமூர்த்தி அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 31

**யாழ். போதனா வைத்தியசாலையில் 3,000 பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேற்றுக் காலை 9 மணியிலிருந்து வடக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட் டுள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற் சிக் கல்லூரியிலும் இந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது வரை 400 சுகாதார சேவையாளர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

அதேபோல் யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள், வடக்கு மாகாண சுகா தார சேவைகள் திணைக்கள சுகா தார சேவையாளர்கள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார சேவையா ளர்கள் உட்பட 3,000 பேருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றப்படும்-என்றார். (அ-03)



# திறன்மிக்க தடுப்பூசி இது

## மருத்துவர் கேசவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

தற்போது வழங்கப்படும் கொரோனா தடுப்பூசி திறன்மிக்க தடுப்பூசியாகும் அனைவரும் பெற்றுக்கொள்ளவேண்டும் என தொற்றுநோய் மருத்துவ நிபுணர் கேசவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை முழுவதும் கொரோனா தடுப்பூசி போடுதல் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நேற்று வடக்கு மாகாணத்திலும் தடுப்பூசி போடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பாதுகாப்பான தடுப்பூசியாகும். இதனால் பக்க விளைவுகள் ஏற்படாது. பக்க விளைவுகள் மிக மிக குறைவு. இது மிகவும் திறன்மிக்க தடுப்பூசி. எனவே பொதுமக்கள் அனைவரும் போட்டுக் கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுகிறேன். சுருக்கமாக நான் ஒன்றை விரும்புகின்றேன். நான் என்னை நேசிக்கின்றேன். எனது குடும்பத்தை நேசிக்கின்றேன். எனது சமூகத்தை நேசிக்கின்றேன். எனது நாட்டை நேசிக்கிறேன்.அதனால் நான் தடுப்பூசி போடுகின்றேன். எனவே அனைவரும் இந்த தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும்-என்றார்.



# வவுனியாவில் தடுப்பூசி போடும் பணி ஆரம்பம்

வவுனியா, ஜன. 31

வவுனியா வைத்தியசாலையில் பணியாற்றும் மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சுகாதாரத்துறையினருக்கு நேற்று கொவிட்-19 தடுப்பூசி போடப்பட்டது.

இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்பட்ட கொவிஷெல்ட் தடுப்பூசிகளை வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஏற்றும் பணி நேற்று தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 700 டோஸ்கள் தடுப்பூசி மருந்துகள் வழங்கப்பட்டன. அதனை ஏற்றும் பணிகள் வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

# தடுப்பூசிகள் ஏற்றல் மன்னாரிலும் நேற்று

மன்னார், ஜன. 31

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகள் நேற்று மன்னார் மாவட்ட சுகாதார துறையினருக்கு ஏற்றப்பட்டன.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வைத்து நேற்றுக் காலை 8.45 மணியளவில் சுகாதாரத்துறையினருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை இடம் பெற்றது.

முதலாவது கொவிட்-19 தடுப்பூசி மன்னார் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கே.கே.வின்சனுக்கு ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவுக்கான வைத்திய அதிகாரி மருத்துவர் கதிர்காமநாதன் சுதாகர், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் ஆகியோருக்கு ஏற்றப்பட்டன. அதனை தொடர்ந்து சுகாதார துறையிருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.





# கிளிநொச்சியிலும் தடுப்பூசி

கிளிநொச்சி, ஜன. 31

கொவிட் 19 தடுப்பூசி ஏற்றும் பணிகள் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டன. நேற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தில் 1200 பேருக்கு தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் முதலாவது தடுப்பூசி யைப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கிளிநொச்சி வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார துறையினர், பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்டோருக்கு தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் 9 இடங்களில் கொவிட்19 தடுப்பு ஊசிகள்போடப்படுவதாகவும், 1200 பேருக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும்பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை குறிப்பிட்டுள்ளது.

# சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டித்து உண்ணாவிரதம்

## வவுனியாவில் நடந்த ஏற்பாடு

வவுனியா, ஜன. 31

எதிர்வரும் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திரதினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் அந்த நாளில் அடையாள உண்ணாவிரதப்போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் நேற்று இடம்பற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் சுதந்திர தினத்தை கரிநாளாகவே நாம் கடைப்பிடிக்கவுள்ளோம். அன்றையதினம் அடையாள உணவுத்தவிர்ப்பு போராட்டங்கள் திருகோணமலை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளன. அந்தவகையில் 4ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் அடையாள உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

இந்தப் போராட்டத்துக்கு பொது அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள், மற்றும்



தமிழ்தேசியத்திற்காக பாடுபடுகின்ற அனைவரும் ஒற்றுமையாக கலந்துகொண்டு நீதிக்காக போராடிக்கொண்டிருக்கும் எமது போராட்டத்தை மேலும் வலுப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். எமது உறவுகள் கிடைக்கும் வரைக்கும் சுதந்திர தினத்தை துக்கதினமாகவே நாங்கள் கடைப்பிடிப்போம்-என்றனர்.

ஈநாடு





பி.பி.சி தமிழுக்காக
விக்னேஷ்

# பழங்காலத் தமிழர்கள் கோயில் கோபுர கலசங்களில் தானியம் வைத்தமை எதற்கு?

வரலாற்றுக் காலங்களில் தமிழர்களால் கட்டப்பட்ட கோயில்களின் கோபுர கலசங்களில் தானியத்தை அடைத்து வைக்கும் வழக்கமிருந்தது.

இப்போதும் புதிதாகக் கட்டப்படும் கோயில் கோபுர கலசங்களில் தானியங்களை அடைத்து வைக்கும் இந்த வழக்கம் தொடர்கிறது.

கோயில் கோபுரத்தின் கலசம் மிகவும் உயரமான இடத்தில் இருப்பதால் அந்த தானியங்கள் மிகவும் பத்திரமாக இருக்கும் என்றும், இயற்கைச் சீற்றங்கள், படையெடுப்பு, பஞ்சம் உள்ளிட்ட காலங்களில் இவை வேளாண்மை செய்ய பயன்படுத்தப்பட்டு, மக்களின் பசிப்பிணியைப் போக்க உதவும் என்றும் சிலர் கூறி வருகின்றனர்.

இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சிக்குப் பின்னர் இந்தக் கூற்று மிகவும் பரவலானதாகி விட்டது.

இது வரலாற்று ரீதியாக எந்த அளவுக்கு உண்மை, நீண்ட நாட்களாக அதிக வெப்பத்தில் சேமித்து வைக்கப்படும் அந்த தானியங்கள் முளைத்து வளர்வதற்கு அறிவியல் ரீதியாக எந்த அளவுக்கு சாத்தியம் உள்ளது என்பதை பிபிசி தமிழ் ஆராய்ந்து. முதலில் இதன் வரலாற்றுப் பின்புலத்தை பார்ப்போம். கலசத்துக்குள் இருக்கும் தானியம் முளைக்குமா என்று இக்கட்டுரையின் இரண்டாம் பாதி விளக்குகிறது.

### ‘தானியங்கள் செழிப்பின் அடையாளம்’

கோயில் கோபுர கலசங்களில் தானியங்களை அடைத்து வைக்கும் பழக்கம் குறித்து பிபிசி தமிழிடம் பேசினார் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர் ஆ. சிவசுப்பிரமணியன்.

“ஒருவர் இறந்து விட்டால் இறந்த உடலின் அருகே ‘நிறை நாழி’ (படி நிறைய நெல் வைப்பது) வைக்கும் பழக்கம் இன்றும் பல வேளாண் சமூகங்களிடையே உள்ளது. இது அவர் இறந்த பின்னும் செழிப்புடன் இருக்க வேண்டும் எனும் நோக்கில் வைக்கப்படுவது. திருமண வீடுகளிலும் நெல்லையில் மணமக்கள் தலையில் தூவி வாழ்த்தும் முறை இருந்தது. இது சங்ககால இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மணமக்கள் செழிப்புடன் வாழ வேண்டும் நோக்கத்தில் செய்யப்படுவது. தானியங்கள் தமிழ்ச் சமூகத்தால் செழிப்பின் அடையாளமாக பார்க்கப்பட்டது. மதங்கள் நிறுவனமையம் ஆனபோது சடங்குகள் உருவாக்கப்பட்டன. அதன்போது தெய்வத்துக்கும் செழிப்பை சேர்க்கும் நோக்கத்துடன் கோயில் கோபுரங்களில் தானியங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்கலாம். செழிப்பை குறிக்கும் நோக்கிலேயே இந்த சடங்குகள் பின்பற்றப்பட்டன” என்கிறார் சிவசுப்பிரமணியன்.



அவர் எழுதிய ‘மந்திரமும் சடங்குகளும்’ எனும் நூலில் இது குறித்து மேலும் விரிவாக எழுதியுள்ளார்.

### பழங்கால தமிழர்கள் தானியங்களை எப்படி சேமித்தனர்?

பழங்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள், கோட்டைகள் ஆகியவற்றில் நெற்களஞ்சியங்கள் இருந்தன. இயற்கைச் சீரழிவு, முற்றுகை, பஞ்சம் உள்ளிட்ட காலத்தில் அந்த நெற்களஞ்சியங்களில் இருந்து மக்களுக்கு தானியங்களை கடனாக கொடுத்து இருக்கிறார்கள். இதற்கான கல்வெட்டு ஆதாரங்களும் இருக்கின்றன.

“பழங்காலத்தில் கட்டப்பட்ட பெரும்பாலான கோயில்களில் நெற்களஞ்சியங்கள் இருந்தன. அவற்றின் மதில் சுவர்கள் மிக உயரமாக அமைக்கப்பட்டு இருந்ததற்கான காரணம், எதிரிகளால் முற்றுகையிடப்படும்போது மக்கள் கோயில்களுக்குள் அடைக்கலம் புகுந்து தங்களை தற்காத்துக் கொள்ளவும், கோயில்களில் இருக்கும் தானியங்கள் பாதுகாக்கப்படவுமே ஆகும்.”

“பெரிய நெல் களஞ்சியங்களை அமைக்கும் பழக்கம் இருந்த காலகட்டத்தில் அவ்வளவு உயரத்தில் வைக்கப்பட்டுள்ள கோபுர கலசங்களில் இருக்கும் தானியங்கள் எந்த அளவுக்கு மக்களுக்கு உதவியாக இருந்திருக்கும், அப்படி இருந்தாலும் வெயில், மழையை மீறி நல்ல நிலையில் இருந்திருக்குமா?” என்று கேள்வி எழுப்புகிறார் சிவசுப்பிரமணியன்.



### கலசத்துக்குள் வைத்தால் விதைகள் முளைக்குமா?

விதைகளை சேமித்து வைக்கும் பொழுது நிறைய விஷயங்களை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக விதையினுள் இருக்கும் ஈரப்பதம் மிக முக்கியமான ஒன்று.

தமிழக கோயில்கள்: பண்பாட்டுப் பெருமிதத்தின் உச்சம்

“விதைகளை சேமித்து வைக்கும் பொழுது ஈரப்பதம் 13 சதவீதத்திற்கும் கீழ் (நெல் 13%, சோளம் 12%, கம்பு 12%, தக்காளி கத்தரி போன்ற காய்கறிகளுக்கு 8%) இருக்குமாறு பார்த்துக்கொள்வர். ஏனெனில் ஈரப்பதம் அதிகமாக இருந்தால் மிக விரைவிலேயே பூஞ்சைகளும், பூச்சிகளும் தாக்கும் அபாயம் உள்ளது, அதே சமயத்தில் ஐந்து சதவீதத்துக்கும் கீழ் குறையும் பட்சத்தில் அந்த விதைகள் முளைக்காமல் போவதற்கும் நிறைய வாய்ப்புள்ளது,” என்கிறார் புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் பட்ட ஆய்வாளராக உள்ள ஜீ.கே. தினேஷ்.

“மாதங்கள் செல்ல செல்ல சுற்றுப்புறத்தின் வானிலையை பொறுத்து விதையின் ஈரப்பதமும் குறைந்துக் கொண்டே வரும். அதனால் விதையினுள் இருக்கும் ஈரப்பதம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அதேபோல விதை சேமித்து இருக்கும் இடம் சற்று காற்றோட்டமான இடமாகவும், அதே சமயத்தில் நேரடி வெயில் படாத, வெப்பத்தின் அருகில் இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும். ஏனெனில் காற்றோட்டமில்லாத ஓர் இடத்தில் நாம் விதைகளைச் சேமித்து வைக்கும் பொழுது இந்த விதையிலிருந்து ஆவியாகும் நீராவி, காற்றின் ஈரப்பதத்தை அதிகரித்து பூஞ்சை தாக்குதலை மிக விரைவில் ஏற்படுத்தும், நேரடி வெயிலிலோ அல்லது வெப்பமான பகுதியிலோ சேமிக்கும் போது மிக விரைவில் விதையின் ஈரம் ஆவியாகி மிக விரைவில் முளைக்கும் தன்மையை இழந்துவிடும்,” என்கிறார் தினேஷ்.

### செம்பு கலசத்துக்குள் விதைகள் எவ்வளவு பாதுகாப்பாக இருக்கும்?

இந்திய அரசாங்கம் தேசிய விதைகள் நிறுவனத்தை 1963இல் ஆரம்பித்து, 1968இல் விதைகளுக்கான விதிகளை விதித்து ஒழுங்குமுறைப்படுத்தி வருகிறது. சான்றளிக்கப்பட்ட விதைகளுக்கு முளைக்கும் திறனின் அளவு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

“அதன்படி நெல்லுக்கு முளைக்கும் திறனின் அளவு 80%, சோளத்திற்கு 80%, கம்புக்கு 75% என முக்கியமாக பயிர்களுக்கு இருக்க வேண்டும். ஆனால் தற்போது கிடைக்கும் பெரும்பாலான நாட்டு ரக விதைகளின் முளைப்பு திறன் சான்றளிக்கப்பட்ட விதைகளை விட 20% குறைவாகவே இருக்கின்றன. அப்படிப்பட்ட விதைகளைத்தான் நாம் குடமுழுக்கின் போது கலசத்தினுள் வைக்கிறோம். பெரும்பாலான கோயில் கலசங்கள் செம்பால் வடிக்கப்பட்டிக்கும், அவை வெப்பத்தை நன்கு கடத்தி, தக்க வைத்துக்கொள்ளும். அப்படிப்பட்ட கலசத்தில் நாம் விதைகளை சேமித்து வைக்கிறோம், அவைகளுக்கு மூன்று ஆண்டுகள் கழித்து எவ்வளவு முளைப்பு திறன் இருக்கும் என நீங்களே நினைத்துக் கொள்ளுங்கள்,” என்கிறார் அவர்.

“பொது மக்கள் நினைப்பது போல கலசத்தினுள்ள விதைகளை எடுத்து வறட்சி காலத்தில் வெள்ளாமை செய்யவேண்டிய தேவை எல்லாம் இனி இந்த அறிவியல் யுகத்தில் இல்லை, ஏனெனில் ஆண்டு ஒன்றுக்கு பல கோடிகளை செலவு செய்து சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் விதை சேமிப்பு வங்கிகளும், மரபணு வங்கிகளும் இயங்கி வருகின்றன. ஆக, கலசத்திற்கும் விதை சேமிப்புக்கும் எந்த அறிவியல் அடிப்படையும் இல்லை, அறிவியல் ஆராய்ச்சி அறிக்கைகளும் இல்லை,” என்று கூறி முடித்தார் அவர்.

### கோபுர கலசத்துக்குள் இருக்கும் விதைகள் ஊருக்கே போதுமா?

இந்தக் கேள்விக்கு பின்வருமாறு பதில் தருகிறார் தினேஷ்.

“சாதாரணமாக நமது கிராமத்திலிருக்கும் கோயிலில் இருக்கும் ஒரு கலசத்தின் கொள்ளவு அதிகப்பட்சம் 2 கிலோ வரை பிடிக்கும். பெரிய கோயில்களில் உள்ள கலசத்தின் கொள்ளளவு 5-8 கிலோ வரை இருக்கும், பொதுவாக கோயிலில் ஒற்றை படை எண்களில் வைக்கப்படும் கலசங்கள் கோயில்களுக்கு கோயில் மாறுப்படும், அவை 1 முதல் 9 வரை இருக்கும். அப்படி கணக்கில் எடுத்துக் கொண்டால் பெரிய கோயிலில் அதிகப்பட்சம் 50 கிலோ வரை இருக்கலாம்.”



“ஒரு ஹெக்ரேயருக்கு பாரம்பரிய நெல் பயிரை விதைக்க 30-45 கிலோ வரை தேவைப்படும், இப்படி ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு விதை வீதம் இருக்கின்றது, கலசத்தில் 9 வகை தானியங்களை சேர்ப்பர், அப்படி பார்த்தால் நெல் விதை மட்டும் அதிகபட்சமாக 10 கிலோ இருக்கலாம். இந்த 10 கிலோவை வைத்து 500 பேர் உள்ள கிராமத்திற்கு எப்படி நெற்பயிரை நட்டு அறுவடை செய்து உணவளிக்க முடியும், அதுவும் இயற்கை பேரிடர் காலங்களில். இதற்கு சாத்திய கூறுகளே இல்லை. அடிப்படையும் இல்லை.” ■

## செய்தியின் பின்னணியில்...




# ஊறுகாய் மான்மியம்

மாலி

டுபாயில் நிகழ்ந்த கார் விபத்து மரணம் ஒன்று, பிபிசி முதலான, உலகின் பிரதான செய்தி சேவைகளிலும், பத்திரிகைகளிலும் செய்தியாகியது.

68 வயதான கிரித் பாட்டக், ஓர் இந்திய வம்சாவழி பிரிட்டிஷ் பிரஜை. ஒரு வர்த்தக சாம்ராஜ்யத்தின் இளவரசர். உலகம் முழுவதும் அறியப்பட்ட 'பட்டக்' ஊறுகாய் நிறுவனத்தின் அதிபர். இவர்தான் அந்த விபத்தில் காலமானவர்.

பிரிட்டனை மையமாகக்கொண்டு, நாற்பதுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் 'பட்டக்' உற்பத்திகளான ஊறுகாய் வகைகளும் மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட கறி, தண்டூரி பசை வகைகளும் அப்பளங்களும் இந்திய வகை உணவு சந்தையில் உலக கிராக்கியைப் பெறுவன. பிரிட்டனில் உள்ள 10 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய உணவகங்களில் 90 வீதமானவை பட்டக் உற்பத்திகளையே பயன்படுத்துகின்றன. பிரிட்டனின் இந்தியவகை உணவுப் பொருள் தயாரிப்பில் காற்பங்கு பட்டக் தயாரிப்புகள்.


1950களின் நடுப்பகுதியில் 5 ஸ்ரேர்ளிங் பவுண்களுடன் ஆரம்பித்து, இன்று 200 மில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்கள் பெறுமானத்தைக்கொண்டிருக்கிறது இந்த வர்த்தக சாம்ராஜ்யம். கென்யாவில், பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான 'மாமா கிளர்ச்சி'களின்போது 1956இல் அங்கிருந்து வெளியேறி, கப்பலில் பிரிட்டன் வந்து சேர்ந்த பல்லாயிரக் கணக்கானோரில் ல்க்ஷ் மிசங்கர் பாட்டக் குடும்பமும் ஒன்று. மனைவி சாந்தா கௌரியும் இவர்களின் ஆறு பிள்ளைகளுமாக எட்டுப்பேர் கொண்ட குடும்பம். பிள்ளைகளில் நால்வர் ஆண்கள் இருவர் பெண்கள்.

குஜராத்தில் பிறந்த லக்ஷ்மிசங்கர் பாட்டக், பிரிட்டிஷ் ஆட்சி அளித்த ஊக்குவிப்பில் கென்யாவில் குடியேறி, அங்குதான் மணமுடித்தார். குடும்பத்துடன் அவர் லண்டன் வந்தபோது ஐந்து ஸ்ரேர்ளிங் பவுண்கள்தான் அவரிடமிருந்தது. குடும்ப சீவனோபாயத்தைத் தேடி, லண்டன் பெருநகர்ப் பகுதி கென்ரிஷ் ரவுணில், அவர்கள் தங்கியிருந்த சிறிய அளவிலான அடித்தள வதிவிடத்து சமையல் கட்டில் சமோசாவும் இந்திய இனிப்பு பண்டங்களும் தயாரித்து, வீதி விற்பனையில் ஈடுபட்டார்கள்.

கைராசிக் காரர்கள் வியாபாரமும் சூடுபிடித்தது. ஆறு வயதுப் புதல்வன் கிரித், தேவைப்படும் இடங்களுக்கெல்லாம் பண்டங்களைத் தினசரி கொண்டுசென்று கொடுத்தான். ஆங்கிலம் பேச தெரியாததில், விநியோக முகவரியும் தமது வீட்டு முகவரியும் எழுதப்பட்ட இரு கடதாசி அட்டைகளை வைத்திருப்பான். போகும்போதும் வரும்போதும் இவற்றை பஸ்ஸில் காட்டி, போய்வந்தான். சிறுவர்களுக்கான இலவச பஸ் பாஸூம் இருந்தது. பஸ் நடத்துநர்களும் பாதசாரிகளும் அவனுக்கு உதவினார்கள்.

சில ஆண்டுகளில், லண்டனில் 'பிஸி'யான இரண்டு இடங்களில் தமக்கான சிறு விற்பனை நிலையங்களை திறந்தார்கள். வீட்டில், அயலவர்களின் முறைப்பாடுகள் பெருகத் தொடங்கின. சமையல் மணமும் சத்தமும் மூன்று மாதங்களில் அவர்கள் கென்ரிஷ் ரவுணைவிட்டு வெளியேறவேண்டியதாயிற்று. 1962இல் லண்டனிலிருந்து தொலைவில், நொதம்ப்ரனில் பழைய ஆலை ஒன்றை தமக்கு ஏற்றபடி மாற்றி அமைத்து, பாட்டக் குடும்பம் அங்கு இடம்பெயர்ந்தது. அங்கு தான் பாட்டக் குடும்பத்தின் ஊறுகாய், சட்னி தயாரிப்பு ஆரம்பமானது. சாந்தா கௌரியின் 'பொருள்கள் கலவை'யில், வெவ்வேறு வகை கறி பசைகளும் உருவாகின. காய்கறி வியாபாரத்திலும் ஈடுபட்டிருந்தபோது, மேலதிகமாய்த் தெரிந்த காய்கறி வகைகள் ஊறுகாய் தயாரிப்புக்கு கருவாகின.

1972இல் உகண்டாவில் இடி அமின் மேற்கொண்ட ஆசியர்கள் வெளியேற்ற நடவடிக்கை பாட்டக் குடும்பத்துக்கு பேரதிருஷ்டமாய் அமைந்தது. பல்லாயிரக் கணக்கில் பிரிட்டனுக்கு வந்த இவர்களுக்கு பிரிட்டிஷ் இராணுவம் முகாம்கள் அமைத்து வதிவிடம் அளித்தபோது, இராணுவ



அதிகாரிகளிடம் தொடர்புகொண்டு, முகாம்களில் அகதிகளுக்கான உணவும், குஜராத்தி மொழியில் அவர்களுக்கு ஆலோசனைப் பிரசுரங்களையும் வழங்க, கெட்டிக்காரரான லக்ஷ்மிசங்கர் பாட்டக் தீர்க்கதரிசனத்துடன் ஊகித்த திட்டம், பின்னர் இங்கிலாந்தில் பெருகிய குஜராத்தி சமூகத்தில் அவருக்கு பெரும் சந்தை வாய்ப்பை திறந்தது.

1976இல் லக்ஷ்மிசங்கர் பாட்டக், புதல்வர் கிரித் பாட்டக்கிடம் வியாபார பொறுப்புக்களை ஒப்படைத்தார். உணவு தொழில் நுட்பத்திலும் ஹோட்டல் நிர்வாகத்திலும் பட்டம் பெற்ற மருமகள் மீனா கிரித், மாமியார் மெச்சும் மருமகளானார். சாந்தா கௌரியின் குடும்ப இரகசியமான பொருள்கள் கலவையில் மருமகள் மீனா மேலும் ஒரு மெருகு சேர்த்தார். தண்டூரி, திக்கா என்று, புதுப்புது வகைகள் மேலும் உருவாகின. பட்டக் இந்திய உணவில் உலக அடையாளமாகி, தொழில் நிர்வாக பாட நூல்களில் 'கோக்கா கோலா', 'பொடி ஷோப்' என்பவற்றுடன், 'பட்டக்' ஒரு மாதிரி நிறுவனமாக குறிப்புப்பெற்றது.

இக் குடும்ப சாதனையில், குடும்பத்தில் கொந்தளிப்பில்லாமலும் இருக்கவில்லை. பாட்டக் தம்பதிகளின் இரு புதல்விகளான சித்திரலேகா மேத்தாவும் அனிலா சாஸ்திரியும் வியாபார பங்குகளில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக லண்டன் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். சொத்துக்களை ஆண் வாரிசுகளுக்கே அளிக்கும் இந்திய வழமையில் இது நிகழ்ந்தாலும், இந்த வழமை சிலரால் இன்னமும் ஏற்கப்பட்டாலும், ஆங்கிலேய முறைமையோடு இணைந்த தமக்கு இந் நடைமுறை பொருந்தாது என அவர்கள் வாதிட்டார்கள்.

1974இல் ஆறு பிள்ளைகளுக்கும் பங்குகள் வழங்கப்பட்டன. பின்னர் 1989இல் இரு பெண் பிள்ளைகளதும் பங்குகள் தாயாரிடம் திருப்பியளிக்கப்பட்டன. அவை பின்னர், புதல்வர் கிரித்துக்கு வழங்கப்பட்டுவிட்டதாகவும் தாம் இதனை அப்போது சரியாக புரிந்துகொள்ளவில்லை என்றும் தெரிவித்த சகோதரிகள், இந்திய இந்து மரபுச் சட்டம் 1956இல் திருத்தப்பட்டுவிட்டதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். தாய் சாந்தா கௌரியிடமும் சகோதரர் கிரித்திடமும் நஷ்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நடைமுறை பிள்ளைகளுக்கு நன்கு தெரியும் என்றும், மருமக்களுடனான பிணக்குகளைத் தவிர்த்து, பெற்றோர் எப்போதும் ஆண் பிள்ளைகளுடனேயே வாழ, பெண் பிள்ளைகள் கணவர்களுடன் சென்று வாழ்வதும், சொத்துக்கள் ஆண்களுக்கே செல்வதும் முறையானது என்றும் மறு தரப்பில் வாதிடப்பட்டது. ஓர் இணக்கத்துக்காக ஐந்து வாரங்கள் வழக்கு ஒத்திவைக்கப்பட்டபோது, தலா 4 மில்லியன் ஸ்ரேர்ளிங் பவுண்களை சகோதரிகள் இருவரும் ஒப்புக்கொண்டதில் வழக்கு சமரசத்துடன் முடிந்தது.

இத்தகைய குடும்ப தகராறுகளைத் தீர்த்துவைப்பது மிகவும் கடினமானது என்றும், இத்தகைய வழக்குகள் ஒரு நெருக்கடியானவை என்றும் வழக்கை விசாரித்த நீதியரசர் தெரிவித்திருந்தார்.

ஆட்சிக் காலத்தில் இந்திய பிரதமர் நரசிம்ம ராவ் எதிர்கொண்ட வழக்குகளில் லக்ஷ்மிசங்கர் பாட்டக் தொடுத்த வழக்கும் ஒன்று. அச்சிடும் கடதாசி இறக்குமதி ஒப்பந்தம் ஒன்றுக்காக 1984இல் நியூயோர்க்கில் நரசிம்ம ராவின் ஏற்பாட்டில் அப்போது சர்ச்சைக்குரியவராக விளங்கிய சந்திரசுவாமிமூலம் ஒரு லட்சம் அமெரிக்க டொடர்களை லக்ஷ்மிசங்கர் பாட்டக் வழங்கியதான வழக்கு, பின்னர் லக்ஷ்மிசங்கரின் சாட்சியங்கள் நம்பிக்கைத் தன்மையற்றும் முரண்பாடுகளுடனும் காணப்படுவதாக தெரிவித்து, இந்திய நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. பிரபல வழக்கறிஞர் கபில் சிபில் இதில் நரசிம்ம ராவுக்காக வாதாடியிருந்தார்.

லக்ஷ்மிசங்கர் பாட்டக், பெருவாரியான பணத்தை இங்கிலாந்திலும் இந்தியாவிலும் உடல்நல, கல்வி துறைகளில் தரும நன்கொடையாக வழங்கியிருக்கிறார். 1997இல் அவர் காலமானபோது, மனைவி சாந்தா கௌரி 2010இல் காலமானார். ஏனைய சகோதரர்களின் பங்குகளையும் பெற்று, கிரித் பாட்டக்கும் மனைவி மீனாவும், பேணப் பட்டு வந்த 'பொருள்கள் சேர்கை'யை குடும்ப இரகசியமா கவே பேணு வதும், அதே தயாரிப்பு முறைகளை கையாள் வதும் 'பட்டக்' கின் வெற்றியின் இரகசியம் என்று சொல்லப்படுகிறது.

மஞ்செஸ்டரில் இப்போது தலைமையகத்தைக் கொண் டுள்ள 'பட்டக்' குடும்ப நிறுவனத்தை, 2007இல் ஏபிஎவ் என்ற கம்பனிக்கு கிரித் பாட்டக் விற்றுவிட்டார்.

'ஊறுகாய் மான்மியம்', பல ஆண்டுகளுக்கு முன்னர் 'பட்டக்' ஊறுகாய் பற்றி சோ. சிவபாதசுந்தரம் 'நாழிகை' சஞ்சிகையில் எழுதியபோது, அதற்கிட்டிருந்த தலைப்பு. அது, இவ்வேளையில் நினைவில் வந்தது. ■

> **பிரிட்டனை மையமாகக் கொண்டு, நாற்பதுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் 'பட்டக்' உற்பத்திகளான ஊறுகாய் வகைகளும் மற்றும் போத்தல்களில் அடைக்கப்பட்ட கறி, தண்டூரி பசை வகைகளும் அப்பளங்களும் இந்திய வகை உணவு சந்தையில் உலக கிராக்கியைப் பெறுவன. பிரிட்டனில் உள்ள 10 ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய உணவகங்களில் 90 வீதமானவை பட்டக் உற்பத்திகளையே பயன்படுத்துகின்றன. பிரிட்டனின் இந்தியவகை உணவுப் பொருள் தயாரிப்பில் காற்பங்கு பட்டக் தயாரிப்புகள்.**



# போராட்டங்களை முன்னெடுப்பதால் எந்தப்பயனும் எவருக்கும் இல்லை

## கிழக்கு முனையம் குறித்து அரசாங்கத்தின் பதில் இது



கொழும்பு,ஜன.31

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் போராட்டங்களை முன்னெடுப்பதால் எந்தவிதப் பயனும் எவருக்கும் கிடைக்கப் பெறாது. பேச்சுக்கள் மூலமே உரிய தீர்வு காண முடியும்.**

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தற்போது தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக ஊழியர்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசிய வளங்களை விற்கும் கொள்கை அரசாங்கத்துக்குக் கிடையாது என்பதை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாகவே அறிவித்துள்ளனர். கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.

2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொழும்பு துறைமுகத்தில் எந்தவொரு முனையங்களும் அபிவிருத்தி செய்யப்படவில்லை.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக 35 வருட காலத்துக்கு வழங்க யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்குத் துறைமுக ஊழியர் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை அபிவிருத்தி செய்ய வேண்டும் என துறைமுக ஊழியர் சங்கத்தினரும், துறைமுக பொறியியல் சங்கத்தினரும் குறிப்பிட்டு செயல்திட்ட யோசனைகளை முன்வைத்தனர்.

கிழக்கு முனையம் தொடர்பில் கடந்த அரசாங்கம் இந்தியாவுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாகப் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. கிழக்கு முனைய விவகாரத்தில் சிறந்த தீர்மானத்தை எடுக்க ஜனாதிபதியால் எழுவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினர் கடந்த வாரமும் 5 ஆவது தடவையாகக் கூடினர்.

துறைமுக ஊழியர்கள், துறைமுகப் பொறியியலாளர் சங்கத்தினர் முன்வைத்துள்ள யோசனைகள் பரிசீலனை செய்யப்படுகின்றது.

இவ்வாறான பின்னணியில் துறைமுக ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். போராட்டங்களை முன்னெடுப்பதால் பொருளாதாரத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படும். இதனால் எவருக்கும் நன்மை கிடைக்கப்போவதில்லை. பேச்சுக்கள் மூலமாகவே தீர்வைக் காண முடியும்.

துறைமுக ஊழியர்கள் முன்னெடுத்துள்ள போராட்டங்களின் பின்னணியில் அரசியல் நோக்கங்கள் உண்டு என்பதைத் தெளிவாகக் குறிப்பிட முடியும். தொழிற்சங்கத்தினருடன் இம்மாதம் முதல் வாரத்தில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

இதன்போது துறைமுக முனைய விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். இவ்வாறான நிலையில் இவர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது பொருத்தமற்ற செயல்பாடாகும்- என்றார். (எ)

## மேலும் 859 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு,ஜன.31

இலங்கையில் நேற்று முன்தினம் 859 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதில் 313 பேர் கொழும்பைச் சேர்ந்தவர்கள் என்றும், 211 பேர் கம்பஹாவைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு 79 பேர் குருநாகலைச் சேர்ந்தவர்கள் என்றும் களுத்துறையில் 78 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் புத்தளத்தில் 47 பேருக்கும், அம்பாறையில் 22 பேருக்கும், மாத்தறை மற்றும் அநுராதபுரத்தில் தலா 20 பேருக்கும், கேகாலையில் 19 பேருக்கும், காலியில் 17 பேருக்கும், மாத்தளையில் 11 பேருக்கும், இரத்தினபுரியில் 09 பேருக்கும் கண்டியில் 05 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் இது வரை கொரோனா தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 62 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதில் 55 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்துள்ளதுடன் ஆறாயிரத்துக்கும் மேற்பட்டோர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேவேளை 300 இற்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றால் உயிரிழந்தனர். (எ)

## விபத்துக்களில் 8 பேர் பலி!

கொழும்பு,ஜன.31

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்தனர்.

இதில் 5 பேர் நேற்று முன்தினம் உயிரிழந்தனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஏனைய மூவரும் நேற்றுக்காலை 6 மணிக்குள் இடம்பெற்ற விபத்துக்களில் உயிரிழந்தவர்களாவர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 5 பேர் மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர்களாவர். பாதசாரிகள் இருவரும் இந்த விபத்துக்களில் உயிரிழந்தனர்- என்றார். (எ)




# இலங்கை மீது இந்தியாவின் அழுத்தும் அதிகரித்தது ஏன்?

## முஜிபுர் ரஹ்மான் விளக்கம்



கொழும்பு,ஜன.31

2010 - 2015 இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கைக்குள் சீனா ஆதிக்கம் செலுத்துவதற்கான வாய்ப்பை ராஜபக்ஷக்கள் ஏற்படுத்திக் கொடுத்தமையாலேயே தற்போது இந்தியாவும் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கு ஏதுவான காரணியாக அமைந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக கிழக்கு முனைய விவகாரத்துக்கும் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான சாரா என்ற பெண் இந்தியாவில் இருக்கின்றமைக்கும் ஏதேனும் தொடர்புகள் காணப்படுமா? என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கவில்லை என்று அரசாங்கம் கூறினாலும் இந்தியாவிலுள்ள அதானி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அரசாங்கம் கிழக்கு முனையத்தை தமக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நாட்டின் பல பகுதிகளிலும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களின் பிரதிபலனாக ஜனாதிபதியும், பிரதமரும் அவர்களது ஆசனங்களிலிருந்து இறங்கி மதகுருமார்களைத் தேடிச் சென்று நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

2010 - 2015 ஆம் ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இலங்கையில் சீனா ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான அதிகளவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

2012 இல் கொழும்பு துறைமுகத்திலுள்ள சி.ஐ.சி.டி. முனையத்தின் 85 வீதத்தை சீனாவுக்கு வழங்கியதால் அதன் திறப்பு விழாவின் போது இலங்கையின் தேசிய கொடியைக்கூட ஏற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

இவ்வாறு சீன ஆதிக்கத்துக்கு ராஜபக்ஷக்கள் இடமளித்தமையால் இந்துமா சமுத்திரத்தில் வலய நாடுகளுடன் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதால் எமக்கும் ஒரு பங்கை வழங்குங்கள் என்று இந்தியா அழுத்தம் பிரயோகிக்கின்றது.

இந்தியா இலங்கை மீது இவ்வாறு அழுத்தம் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததும் ராஜபக்ஷக்களே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான சாரா என்ற பெண் இந்தியாவில் உள்ளார்.

ஆனால் அரசாங்கம் இதுவரையில் அவரை ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கேட்கவில்லை. கிழக்கு முனைய விவகாரத்தை இதனுடன் தொடர்புபடுத்தி இந்தியாவுடன் ஏதேனும் இரகசிய பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் எழுகிறது.

அவரை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு இந்தியாவிடம் கேட்குமாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விடமும் வலியுறுத்தியுள்ளேன் - என்றார். (எ)



# 8 கிலோ கஞ்சாவுடன் யாழில் பெண் கைது

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அச்சுவேலியைச் சேர்ந்த பெண் ஒருவர் 8 கிலோ கிராம் கஞ்சாவுடன் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

இந்தப் பெண் நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாகவும், இவருடைய கணவர் பிரதேச சபை ஒன்றில் சாரதி பணியாற்றி வருவதாகவும் தெரியவருகிறது.

மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து வீட்டைச் சோதனையிட்டபோது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது. கஞ்சாவுடன்கைதுசெய்யப்பட்ட பெண் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (எ)

# கிழக்கு முனையம் இந்தியாவுக்கு அரசாங்கத்துக்குள் பெரும் பிளவு

## துஷார இந்துநில் சுட்டிக்காட்டு



கொழும்பு,ஜன.31

அமைச்சர் உதய கம்மன்பில போன்றோரின் கருத்துக்களை கவனத்தில் கொள்ளாமல் கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ளதால் அரசாங்கத்துக்குள் கருத்து முரண்பாடுகளும், பிளவுகளும் ஏற்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரொருவர் இந்தியாவில் உள்ளார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய ஏதேனும் இரகசியங்கள் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குத் தெரிந்திருக்கக் கூடும். அதனை வெளிப்படுத்திவிடக்கூடாது என்பதற்காகவா அரசாங்கம் இவ்வாறு தேசிய சொத்துக்களை அவ்வாறான நாடுகளுக்கு விற்றுக் கொண்டிருக்கின்றது என்ற சந்தேகம் எழுகிறது.

வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை அழைத்து வருவது தொடர்பில் நாம் கேள்வியெழுப்பிய போது அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய போதிலும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

சர்வதேச உறவுகளை சுமூகமாகப் பேணுவதற்கு தேசிய சொத்துக்களை விற்க வேண்டிய தேவை கிடையாது. எவ்வாறிருப்பினும், காலம் காலமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்குக் காணப்படுகின்ற கரும்புள்ளி தற்போதைய அரசாங்கத்தின் செயல்பாடுகளால் மேலும் ஸ்திரமடைந்துள்ளது- என்றார்.(எ)




# ஜனநாயகம், இறையாண்மையில் சிறந்து விளங்குகிறது இலங்கை

## ரஷ்ய வெளிவிவகார அமைச்சு பாராட்டு



கொழும்பு,ஜன.31

**ஜனநாயகம், இறையாண்மை மற்றும் சமூக நோக்குடைய சிறந்த அரசாக சர்வதேச ரீதியில் இலங்கை அங்கீகாரம் பெற்றுள்ளது என ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மரியா சகரோவா தெரிவித்துள்ளார்.**

ரஷ்யாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

‘ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்ச்சியாக ஆக்கபூர்வமானதாகவே காணப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச ரீதியான விவகா ரங்களில் இலங்கையுடனான அரசியல் உறவுகளை நாம் உயர் மட்டத் தில் பேணி வருகின்றோம்.

மேலும் ரஷ்யாவின் தேயிலை இறக்குமதித்துறையில், இலங்கை பெரும் பங்காற்றி வருகின்றது”- என்றார். (எ)

# ‘தமிழ் இளையோருக்கு இராணுவ பயிற்சி ஆபத்து’

யாழ்ப்பாணம்,ஜன.31

இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படாத நிலையில் தமிழ் இளையோருக்கு இராணுவப் பயிற்சி வழங்குவது ஆபத்தானது என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர், ரெலோ இளைஞர் அணிச் செயலாளர் சபா.குகதாஸ் எச்சரித்துள் ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கூறிய 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இராணுவப் பயிற்சி இந்த நாட்டின் தமிழ் - சிங்கள மக்களிடையே இன நல்லிணக்கம் ஏற்படாமல் தொடர்ந்தும் சந்தேகங்கள், முரண்பாடுகள், பரஸ்பரம் இனங்களிடையே உரிமைகளைப் பகிர்ந்து கொள்ளாமை, போர்க்குற்றங்கள், மனிதப் படுகொலைக்கான நீதி நியாயங்கள் கிடைக்கப்பெறாத வரை இராணுவப் பயிற்சியை தமிழ்த் தலைமைகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளுதல் இன ரீதியாகப் பாரிய ஆபத்துக்களை உருவாக்கும். அரசாங்கம் கட்டாயப்படுத்தி இராணுவப் பயிற்சி கொடுப்பது வேறு. அதனை தமிழ்த் தலைமைகளின் ஆதரவுடன் கொடுப்பது இனத்தின் நீதிக்கான பயணத்தில் பின்னடைவை உருவாக்கும்.

இலங்கை இராணுவம் போர் விதிமுறைகளை மீறியுள்ளமை தொடர்பில் நீதி கேட்கும் தமிழர் தரப்பு அந்தக் குற்றங்களைப் புரிந்த இராணுவத் தளபதியே பொறுப்பாக இருக்கும் போது இந்த இராணுவத்தை வழி நடத்திய ஆட்சியாளர்களே ஆட்சிக் கதிரையில்இருக்கும்போது அவர்களின் பயிற்சியை நாமே ஏற்றுக் கொள்வது குற்றம்புரிந்தவர்களை நாமே பிணை எடுப்பதற்கு ஒப்பானதாகும். இங்கு தான் தமிழர்களுக்கு ஆபத்து உருவாகிறது. - என்றார். (எ)

# 5 கஜமுத்துக்களுடன் நால்வர்கைதாகினர்



கொழும்பு,ஜன.31

உடப்புஸ்ஸலாவ பகுதியில் நேற்று முன்தினம் மாலை சட்ட விரோதமான முறையில் 5 கஜமுத்துக்களை விற்க முற்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாத்தளை மற்றும் மெதிரிகிரிய பகுதியைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து ஜீப் ரக வாகனம், மோட்டார் சைக்கிள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

# நாம் மௌனம் காப்பதாக நினைத்துவிட வேண்டாம்

## திகாம்பரம் எம்.பி. கூறுகிறார்



ஹற்றன்,ஜன.31

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம் மௌனம் காப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற கட்சி செயல்பாட்டாளர்களுடனான சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர்அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக அறிவித்துவிட்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

ஆனால், மொட்டுக்கட்சிக்கு வாக்களித்த மக்களே இன்று அரசாங்கத்தின் செயல்பாடுகளைக் கடுமையாக விமர்ச்சிக்கின்றனர். பொருள்களின் விலை நாளாந்தம் உயர்வடைந்து வருகின்றது. சிலவேளை நாமும் அந்தப்பக்கம் சென்றிருந்தால் இந்நேரம் மக்களின் சாபத்துக்கு உள்ளாக வேண்டியிருந்திருக்கும்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஜனாதிபதியும் இதுதொடர்பில் அறிவிப்புக்களை வெளியிட்டிருந்தார்.

ஆனால் அவரின் உத்தரவைக் கூட கம்பனிகள் ஏற்பதாகத் தெரியவில்லை. மறுபுறத்தில் அடுத்த பேச்சுவார்த்தையில் வெற்றி நிச்சயம் என வீராப்பு பேசிய கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களும் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராடினால் மட்டுமே கம்பனிகளை ஒரு நிலைக்குக் கொண்டுவரமுடியும். இதனைச் செய்வதற்கு மாற்றுத் தரப்பினர் தயாராக இல்லை. சம்பள விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம்- என்றார். (எ)




# அஸ்ட்ராசெனகா தடுப்பூசிக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புதல்!

பிரஸ்சல்ஸ், ஜன. 31

கோவிட் தடுப்பூசியை பயன்படுத்த 27 நாடுகளின் கூட்டமைப்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி தொடர்பான தமது ஆய்வுகளில் அந்தத் தடுப்பூசி சுமார் 60 வீத பயனுள்ளதாக இருப்பதாக தெரியவந்ததை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அஸ்ட்ராசெனெகா ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தடுப்பூசி விநியோக கடப்பாடுகளை மீறுகிறதா? என்ற சர்ச்சைகளுக்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

400 மில்லியன் அஸ்ட்ரா செனெகா தடுப்பூசியை வாங்க ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஆண்டு ஒப்பந்தம் செய்தது. எனினும் ஒப்பந்தத்தைவிட குறைந்தளவு தடுப்பூசியையே தற்போது விநியோகிக்க தயாராக நிறுவனம் உள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட அஸ்ட்ரா-செனெகாவின் தலைமை நிர்வாகி பாஸ்கல் சொரியட், சில உற்பத்தி தளங்களில் தடுப்பூசி உற்பத்தியில் பல சிக்கல்கள் இருப்பதாக ஒப்புக்கொண்டார்.

தடுப்பூசி மருந்து தயாரிப்பு உயிரியல் நுட்பம் சார்ந்தது. இது தோடம்பழச் சாறு தயாரிப்பது போன்றது இல்லை எனவும் அவர் கூறினார்.

தற்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்ப மில்லியன் கணக்கான அளவு அஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகள் தயாராக உள்ளன. உற்பத்தியை அதிகரிக்க 24 மணி நேரமும் நாங்கள் மிகத் துரிதமாகச் செயற்பட்டு வருகிறோம் எனவும் அஸ்ட்ரா-செனெகா தலைமை நிர்வாகி பாஸ்கல் சொரியட் தெரிவித்தார். (அ)

# தடுப்பூசி தேசியவாதம் மிகமிக ஆபத்து மிக்கது

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

ஜெனிவா, ஜன. 31

கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பில் செல்வந்த நாடுகள் பின்பற்றும் தேசிய வாதக் கொள்கை தொற்று நோய் நீடிப்பதற்கே வழிவகுக்கும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் எச்சரித்துள்ளார்.

ஏழை நாடுகளில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் தடுப்பூசிக்காக காத்திருக்கும் போது ஆரோக்கியமான தங்கள் குடிமக்களுக்குக்கூட செல்வந்த நாடுகள் தடுப்பூசி போட முற்படுவது கவலை அளிக்கும் விடயம் என கடந்த வெள்ளிக்கிழமை உலக பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அதானோம் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்படும் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளுக்கு ஏற்றுமதிக் கட்டுப்பாட்டை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்துவருவது குறித்தே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

பல நாடுகள் தங்கள் சொந்த மக்களுக்கு மட்டுமே தடுப்பூசிகளை வழங்குகின்றன. இது உலகில் பிற இடங்களில் உள்ள மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை பெரிய ஆபத்தில் தள்ளியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.



கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகின் ஏற்றத்தாழ்வுகளை அம்பலப்படுத்தியுள்ளது. மற்றும் சுரண்டல்களை வெளிக் காட்டியுள்ளது எனவும் அதானோம் கூறினார்.

தொற்று நோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு கருவியாக தடுப்பூசி உள்ளது. தடுப்பூசி விநியோகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஆபத்தையே விளைவிக்கும். இது தொற்று நோய் நீடிக்க ஒரு காரணியாக இருக்கும் எனவும் அதானோம் எச்சரித்தார்.

தடுப்பூசியில் முன்னெடுக்கப்படும் தேசியவாதக் கொள்கை மூலம் சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பான நம்பிக்கையை நாம் இழக்க நேரிடும்.

தொற்று நோய் முடிவுக்கு வந்த பின்னர் கூட அதற்கான விலையை நாம் கொடுக்க நேரிடும் .

இந்நிலையில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் வயதானவர்கள் உள்ளிட்ட அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உலகம் முழுவதும் முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி போடப்பட வேண்டும். இதற்கான தடுப்பூசிகள் சர்வதேச அளவில் சமமாகப் பகிரப்படவேண்டும் .

இந்த தொற்றுநோயிலிருந்து வெளியே வர உள்ள ஒரே மூலோபாயம் உலகம் ஒன்றிணைந்து செயற்படுவதுதான் எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் வலியுறுத்தினார். (அ)

# பழமையான சிவன் கோயில் பாகிஸ்தானில் மீளத் திறப்பு



இஸ்லாமாபாத், ஜன. 31

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இருக்கும் 126 ஆண்டுகள் பழமையான சிவன் கோயில் ஒன்று, புதுப்பித்தல் பணிகள் முடிவுற்று, பக்தர்கள் வழிபாடு நடத்தத் திறக்கப்பட்டிருக்கின்றது.

இந்த கோயிலின் நிர்வாக அதிகாரங்கள் உள்ளூரில் இருக்கும் ஓர் இந்து அமைப்புக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என அதிகாரிகள் நேற்று முன்தினம் கூறினர்.

"தி எவக்யூ டிரஸ்ட் பிரப்பர்டி போர்ட்" என்ற குழுவே, பாகிஸ்தானில் சிறுபான்மையினரின் வழிபாட்டுத் தலங்களைப் பராமரித்து வருகிறது. பாகிஸ்தானில் சமீபத்திய காலத்தில் மட்டும் 12 கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக இந்தக் குழு கூறியுள்ளது.

"பாகிஸ்தானில் உள்ள ஹைதராபாத்தில் இருக்கும் 126 ஆண்டு கால சிவன் கோயில் புதுப்பிக்கப்பட்டு, செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. கோயிலோடு அதிக அளவிலான நிலப்பரப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. எனவே கோயிலுக்கு வரும் இந்துக்கள் தங்கள் மதரீதியிலான சடங்குகளை மேற்கொள்ள முடியும்" என அந்த அறக்கட்டளையின் செய்தித் தொடர்பாளர் அமிர் ஹஸ்மி பிடிஐ செய்தி முகமையிடம் கூறியுள்ளார். அதோடு சிவன் கோயிலை நிர்வகிக்கும் பணி ஓர் உள்ளூர் இந்து அமைப்பிடம் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

"இந்துக்கள் எளிதில் வந்து போகவும், தங்கள் மதரீதியிலான சடங்குகளை செய்யவும், கோயில் வளாகத்துக்குள் இருக்கும் நிலங்களையும், கோயிலுடன் இணைக்குமாறு எங்களது அறக்கட்டளையின் தலைவர் ஆமிர் அஹ்மத்திடம் தேசிய சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் சைலா ராம் கோரிக்கை வைத்தார்" என ஹஸ்மி கூறினார்.

"இந்தக் கோயிலின் சுற்றுப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்ததால், நீண்ட காலமாக பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் எல்லாம் மீட்டெடுக்கப்பட்டு, நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்தச் சிவன் கோயில் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்து வரும் இந்துக்களுக்கு திறக்கப்பட இருக்கிறது" என ஹஸ்மி கூறினார்.

புதுப்பிக்கப்பட்ட கோயில்களில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் சியால்கோட்டில் உள்ள 1,000 ஆண்டு பழமையான ஷவாலா தேஜா கோயிலும் ஒன்று எனக் கூறினார் ஹஸ்மி.

பெஷாவரில் உள்ள மற்ற இந்துமத கோயில்களிலும் புதுப்பித்தல் பணி நடந்து கொண்டிருப்பதாகவும் கூறினார்.

இந்துக்கள் தான் பாகிஸ்தானிலேயே அதிக எண்ணிக்கையில் இருக்கும் சிறுபான்மையினர் என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரப்பூர்வ தரவுகளின்படி, பாகிஸ்தானில் 75 லட்சம் இந்துக்கள் வாழ்கிறார்கள். ஆனால் இந்து சமூகத்தினர்களோ, 90 லட்சம் பேர் வாழ்வதாக நம்புகிறார்கள்.

பாகிஸ்தானில் பெரும்பாலான இந்துக்கள், இந்து மாகாணத்தில் வாழ்கின்றனர்.

அதுமட்டுமின்றி, பாகிஸ்தானின் கராச்சி நகரில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் இன்றளவும் தங்களது கலாசாரம், பண்பாட்டை பின்பற்றி வாழ்ந்து வருகின்றனர்.

# எல்லைகளையும் வணிக வளாகங்களையும் இன்று நள்ளிரவு முதல் மூடுகிறது பிரான்ஸ்

## பொது முடக்கத்தைத் தவிர்ப்பதற்கு மற்றொரு சந்தர்ப்பம் வழங்க முடிவு

பாரிஸ், ஜன. 31

பிரான்ஸ் அரசு பொது முடக்கத்தைத் தவிர்த்து பதிலாக சில புதிய கட்டுப்பாடுகளை நேற்றிரவு திடீரென அறிவித்துள்ளது.

அதன்படி ஐரோப்பிய ஒன்றியம் தவிர்ந்த ஏனைய நாடுகளில் இருந்து பயணிகள் வருவது இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் தடைசெய்யப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் இருந்து வருவோர் அனைவரும் கட்டாய வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

20,000 சதுர மீற்றருக்கு அதிக பரப்பளவில் இயங்கும் உணவு தவிர்ந்த பல் பொருள் வணிக வளாகங்கள் அனைத்தும் இன்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் மூடப்படுகின்றன.

பாடசாலைகள் தொடர்ந்து இயங்கும். வீட்டில் இருந்து தொழில் புரிவதை மேலும் ஊக்குவிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த விவரங்களை பிரதமர் ஜீன் காஸ்ரெக்ஸ் நேற்றுமுன்தினம் இரவு அறிவித்தார். பாதுகாப்புச் சபையின் கூட்டம் முன் கூட்டியே நேற்று மாலை ஆறு மணிக்குத் திடீரெனக் கூட்டப்பட்டது. அங்கு சுமார் இரண்டரை மணிநேரங்கள் நீடித்த ஆலோசனைகளின் முடிவில் பிரதமர் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

எதிர்பார்க்கப்பட்டது போன்று தேசிய அளவிலான பொது முடக்கத்துக்குச் செல்வதற்கு முன்பாக - அதைத் தவிர்க்கும் ஒரு சந்தர்ப்பமாக - சில கட்டுப்பாடுகளை மட்டுமே அறிவிப்பது என்று பாதுகாப்புச்சபை முடிவு செய்துள்ளது. தற்போது அமுலில் உள்ள ஊரடங்கு விதிகளை மேலும் தீவிரமாகக் கண்காணிப்பதற்குப் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய வைரஸ் பரவல் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற போதிலும் அயல் நாடுகளுடன் ஒப்பிடும்போது பிரான்ஸின் நிலைமைகள் முழு அளவிலான முடக்கம் ஒன்றைத் தவிர்ப்பதற்கு இன்னொரு சந்தர்ப்பத்தை வழங்கக் கூடிய கட்டத்திலேயே உள்ளன என்று பிரதமர் தெரிவித்தார்.

பொது முடக்கம் ஒன்றைத் தவிர்ப்பதற்கு "எங்களுக்கு நாங்களே மேலும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கக் கூடிய நிலையில் இன்னமும் இருக்கிறோம்" என்பதை பிரதமர் சுட்டிக் காட்டினார். (அ)




# ‘சூரரைப்போற்று’ அடுத்து ‘மாஸ்டர்’

## ரஹானே, அஸ்வின் சுவாரசியம்

‘மாஸ்டர்’ படத்தைப் பாருங்கள் என்று இந்திய வீரர் ரஹானேவுக்கு, சக வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் பரிந்துரை செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி வெற்றிகரமான அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தை முடித்து நாடு திரும்பியுள்ளது. அடுத்ததாக உள்நாட்டில் இங்கிலாந்தை சந்திக்கவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெறுகிறது. இதை முன்னிட்டு வீரர்கள் சென்னை வந்திறங்கியுள்ளனர். வலைப் பயிற்சி ஆரம்பிக்க இன்னும் சில நாட்கள் இருப்பதால் இந்திய அணியினர் அவரவரது குடும்பங்களுடன் நேரம் செலவிட்டு, ரசிகர்களுடன் சமூக ஊடகங்களில் உரையாடியும் வருகின்றனர்.

அப்படிச் சமீபத்தில் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் இந்திய அணிக்குத் தலைமை வகித்த ரஹானே, ரசிகர்களிடம் என்ன கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம் என்று தனது சமூக வலைதளப் பக்கத்தில் உரையாட ஆரம்பித்தார்.

அப்போது ஒரு ரசிகர், "சென்னைக்கு உங்களை வரவேற்கிறோம். ஏதாவது தமிழ்த் திரைப்படம், தொடரைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த ரஹானே, “ஆம், ‘சூரரைப் போற்று’ படத்தை சப்டைட்டில் உதவியுடன் பார்த்தேன். மிகவும் பிடித்திருந்தது. நடிகர் சூர்யா அற்புதமாக நடித்திருந்தார். இதைச் சொல்லும்போது இன்னொரு விஷயம் நினைவுக்கு வருகிறது. வேறு ஏதாவது திரைப்படப் பரிந்துரை இருக்கிறதா அஸ்வின்?" என்று கேட்டார்.

இதற்கு அஸ்வின், “நீங்கள் ஏன் ‘மாஸ்டர்’ பார்க்கக் கூடாது?" என்று பரிந்துரை செய்தார்.

இந்த உரையாடலின் ஸ்க்ரீன்ஷாட் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு, தமிழ்த் திரைப்படங்களைச் சக வீரர்களுக்கு அறிமுகம் செய்வதால் பலரும் அஸ்வினைப் பாராட்டிப் பதிவிட்டு வருகின்றனர். (அ)

# இந்திய வீரர்கள் தீவிர பயிற்சி



டெஸ்ட் தொடருக்கு தயாராகும் வகையில் கோஹ்லி உள்ளிட்ட வீரர்கள் ஹோட்டலில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க உள்ளது. முதல் இரு போட்டிகள் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பெப். 5:9, 13:17இல் நடக்கவுள்ளன. அடுத்த இரு போட்டிகள் அகமதாபாத்தில் நடக்கும். இத்தொடருக்காக இரு அணி வீரர்கள் சென்னை ஹோட்டலில் 6 நாள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே தனிமைப்படுத்தலில் உள்ள ஹோலி, ஹோட்டல் அறையில் எப்படி தனது நேரத்தை செலவிடுகிறார் என்பது குறித்து தனது ரசிகர்களுக்காக சிறிய வீடியோவை ‘இன்ஸ்டாகிராம்’ சமூக வலைத்தளத்தில் வெளியிட்டார். ஹோலி உடற்பயிற்சியில் ஈடுபடும் இந்த வீடியோ குறித்து அவர் கூறுகையில்,“ தனிமைப்படுத்துதல் நாட்களில் நேரத்தை செலவிட இதை, உடற்பயிற்சி கருவிகள் கட்டாயம் தேவைப்படுகின்றன. நீங்கள் விரும்பினால் எந்த இடத்திலும் பயிற்சியில் ஈடுபடலாம். எல்லோருக்கும் சிறப்பான நாட்களாக அமையட்டும்,’ என தெரிவித்துள்ளார்.

**மயங்க் ‘வேகம்’**

இதேபோல இந்திய அணியின் மற்றொரு வீரர் மயங்க் அகர்வாலும், ஹோட்டலில் உடற்பயிற்சியில் ஈடுபட்ட போட்டோவை தனது ‘இன்ஸ்டாகிராம்’ சமூகவலைத்தளத்தில் வெளியிட்டார். சமீபத்திய அவுஸ்திரேலிய தொடரில் ஆரம்பத்தில் சொதப்பிய இவர், நடுவரிசைக்கு அனுப்பப்பட்டார். தற்போது ஹோலி அணிக்கு திரும்பியுள்ள நிலையில் இவருக்கு இடம் கிடைப்பது சிரமம் தான். எனினும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

**மனைவியுடன் ரோகித்**

இந்திய டெஸ்ட் அணி ஆரம்ப வீரர் ரோகித் சர்மா. இவரும் சென்னை ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அப்போது மனைவி ரித்திகாவுடன் இருக்கும் போட்டோவை வெளியிட்டார். அதில்,‘ குவாரன் டீம்’ என தெரிவித்துள்ளார்.

**நடுவர்கள் அறிவிப்பு**

கொரோனா காரணமாக போக்குவரத்து சிக்கல்கள் இருப்பதால் போட்டித் தொடரை நடத்தும் அணியைச் சேர்ந்தவர்கள் நடுவர்களாக செயல்பட சர்வதேச கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியது. ஒருவேளை தவறுகள் ஏற்பட்டால் சரி செய்யும் வகையில் ஒவ்வொரு அணிக்கும் நடுவர் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பு, 2 இல் இருந்து 3 ஆக அதிகரிக்கப்பட்டது.

இதன்படி, இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் நடுவர்கள் அறிவிக்கப்பட்டனர். இந்திய நடுவர் பட்டியலில் ‘எலைட் பனலில்’ உள்ள நிதின் மேனன், ஐ.சி.சி., எமிரேட்ஸ் பனலில் உள்ள வீரேந்தர் சர்மா, அனில் சவுத்ரி நடுவர்களாக இருப்பர்.

# ரொட்டென்ஹாமை வென்றது லிவர்பூல்



இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், ரொட்டென்ஹாமை ஹொட்ஸ்பரின் மைதானத்தில் நேற்று முன்தினம் அதிகாலை நடை பெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியனான லிவர்பூல் வென்றது.

லிவர்பூல் சார்பாக, றொபேர்ட்டோ பெர்மினோ, ரொட்டென்ஹாமை அலெக்ஸான்டர் அர்னோல்ட், சாடியோ மனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ரெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை பியர்-எமிலே ஹொஜ்ப்ஜெர்க் பெற்றார்.

# சாதித்த இளமைப் பட்டாளம்



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நமது இளம் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் கிண்ணம் வெல்ல முடிந்தது,” என புஜாரா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா சென்ற இந்திய அணி, 4 போட்டிகள் கொண்ட போர்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரை 2:1 எனக் கைப்பற்றியது.

அடிலெய்டில் நடந்த முதல் டெஸ்டில் 36 ஓடங்களுக்குள் சுருண்ட இந்திய அணி மோசமான தோல்வியை பெற்றது. இப்போட்டிக்கு பின் அணித் தலைவர் ஹோலி நாடு திரும்பி யது, காயம் காரணமாக முன் னணி பந்துவீச்சாளர்கள் விலகி யது போன்றவை இந்திய அணிக்கு சிக்கலாக அமையும் என்று கூறப்பட்டது.

ஆனால் முகமது சிராஜ், சுப்மன் கில், வாஷிங்டன் சுந்தர், நடராஜன், நவ்தீப் சைனி, ஷர்துல் தாகூர் போன்ற இளம் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணிக்கு வெற்றி தேடித்தந்த னர். தவிர, ரஹானேவும் அணியை திறம்பட வழிநடத்தினார்.

இதுகுறித்து மூத்த வீரர் புஜாரா கூறியது:-

அடிலெய்ட் டெஸ்டில் கண்ட மோசமான தோல்வி, அணியில் மிகப் பெரிய ஏமாற்றம் அளித்தது. அதன்பின் நடந்த வீரர்கள் கூட்டத்தில் இத்தோல்வியை மறந்து அடுத்து வரும் போட்டிகளில் கவனம் செலுத்த திட்டமிட்டோம். தவிர இப்போட்டி பகலிரவு ஆட்டமாக நடந்தது. இதற்கு முன், நாங்கள் ஒரே ஒரு பகலிரவு டெஸ்டில் மட்டும் விளையாடி உள்ளோம். இது, அவுஸ்திரேலியாவுடன் ஒப்பிடு கையில் மிகமிகக் குறைவு. எனவே இதுகுறித்து அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்று முடிவு செய்தோம். போட்டியில் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த விரும்பினோம். இதற்கேற்ப அணியில் அறிமுகமான இளம் வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி போட்டியில் திருப்பம் ஏற்படுத்தினர். இவர் கள் போட்டியில் ஏற்பட்ட நெருக்கடிகளை சமாளித்தவிதம் பாராட்டுக்குரியது. ஹோலி நாடு திரும்பிய பின் அணியை ரஹானே சிறப்பாக வழிநடத்தி னார். இந்த வெற்றி தனிப்பட்ட ஒரு நபரால் கிடைத்ததல்ல. ஒட்டுமொத்த அணியினருக்கும் இவ்வெற்றியில் பங்கு உள்ளது - என்றார்.

# சகிப் அல் ஹசன் விளையாடுவார்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில், சகலதுறை வீரரான சகிப் அல் ஹசன் விளையாடுவதற்கான வாய்ப்பு இருப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் இறுதிப் போட்டியில், 5 ஓவர்களை வீசிய பின்னர், இடுப்பு வலி காரணமாக மைதானத்திலிருந்து ஓய்வறை திரும்பினார். இதனால் அவர் எதிர்வரும் டெஸ்ட் தொடரில் விளையாடுவது சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஆனால் தற்போது அவரது ஸ்கான் முடிவுகளில் பெரிதளவான பாதிப்புகள் இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

இது குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் மருத்துவர் மன்சூர் ஹொசைன் கூறுகையில், ‘அவரது ஸ்கான் அறிக்கை முற்றிலும் நன்றாக இருக்கிறது. கண்ணீர் இல்லை. எங்கள் பிசியோ ஜூலியன் அவரை மாலையில் பார்த்தார், முன்னேற்றம் உள்ளது. அவர் விரைவில் பயிற்சிக்கு திரும்புவார் என்று நாங்கள் நம்புகிறோம்.

அநேகமாக அவர் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் ஓய்வெடுக்கலாம், ஆனால் தற்போது நாம் பெற்றுள்ள ஸ்கான் அறிக்கைகளை கருத்தில் கொண்டு முதல் டெஸ்டில் அவர் பங்கேற்பது குறித்து எந்த சந்தேகமும் இல்லை’ என கூறினார்.

முன்னதாக நடைபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் சகிப் அல்ஹசன் 56.5 சராசரியாக 113 ஓட்டங்களை குவித்ததோடு ஆறு விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். போட்டித் தடைக்கு பின்னர் அவர் விளையாடிய முதல் போட்டியாக இது அமைந்தது. மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி, பெப்ரவரி 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



மகாத்மா காந்தியின் 73ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுக்காலை யாழ். போதனா வைத்தியசாலை முன்பு உள்ள அவரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கொரோனா தடுப்பூசி திட்டம் வடக்கில் நேற்று ஆரம்பம்

**யாழ்ப்பாணம்,ஜன.31**

**வடக்கு வைத்தியசாலைகள் மூலம் மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நேற்றுக் காலை ஆரம்பமானது.**



கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர்கள் நால்வருக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பமானது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கொரோனா தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொண்டனர்.

இதேவேளை வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கும் கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது.

மூன்று நாள்களுக்கு முன்னெடுக்கப்படும் இந்தப் பணியில் தவறவிடுவோர் தடுப்பூசி ஏற்றும் பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் மட்டும் 5 ஆயிரத்து 820 மருத்துவ சேவையாளர்கள், சுகாதாரத்துறையினருக்கு கொரோனா தடுப்பூசி மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ)

## பதுளையில் சுற்றிவளைப்பு 27 பேர் கைது

பதுளை,ஜன.31

பதுளை மாநகர பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 27 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

பதுளை பிரதான பஸ் நிலையம், அஞ்சல் அலுவலகம், வைத்தியசாலை போன்ற இடங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே முகக்கவசம் அணியத்தவறிய குற்றச்சாட்டில் 27 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடைமுறைகளைப் பின்பற்றாததாலேயே கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 13196\|வே\|1970<br>Divorced\|உரும்பிராய் \| இந்து<br>Business\|UK\|செவ்:04<br>புனர்பூசம்(மிதுனம்)\|155செ.மீ | 8483\| வே\|1977<br>Divorced\|சண்டிலிப்பாய்\| இந்து<br>Nurse\| Sri lanka \| லக்.சூரி.செவ்<br>புனர்பூசம்(மிதுனம்) \|165செ.மீ |
| 13686\|வே \|1974<br>Divorced\|மீசாலை\| இந்து<br>Lawyer \| Sri Lanka\|<br>திருவாதிரை(மிதுனம்)\|170செ.மீ | 9897\| வே \|1978<br>Divorced\|காரைநகர்\|இந்து<br>Sri Lanka\| சூரி.செவ்: 03<br>பூசம்(கடகம்)\|161செ.மீ |
| 12781\| வே\|1976<br>யாழ்நகரம்\| இந்து\|Australia<br>Business\|ஆய்யிலியம்(கடகம்)<br>175செ.மீ | 13786\| வே \|1976<br>Divorced\|பண்டத்தரிப்பு\| இந்து<br>Shop Assistant\| UK\|<br>மூலம்(தனுசு) \|165 செ.மீ |
| 13355 \|வே \|1979<br>Divorced \| யாழ்நகரம்\| இந்து<br>சூ.செவ்:04\| Senior Lecturer<br>Sri lanka \|கார்த்திகை (ரிஷபம்)<br>175செ.மீ | 13241\| வே\|1979<br>யாழ்நகரம்\|Sri Lanka\|செவ்:08<br>N/A\| இந்து \| 165செ.மீ<br>அனுஷம்(விருச்சிகம்) |
| 13205\| வே \|1979<br>கொக்குவில்\| இந்து \|செவ்:04<br>Business\| Canada\|170செ.மீ<br>கேட்டை(விருச்சிகம்) | 13294\| வே \|1979<br>கந்தர்மடம்\| இந்து \|செவ்:07<br>N/A\|Sri lanka\|<br>கார்த்திகை (ரிஷபம்) \|160செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

### ‘கிழக்கு முனையத்தை பாதுகாப்போம்’

# அரசாங்கத்துக்கு 2 நாள்கள் கால அவகாசம் 85 தொழிற்சங்கங்கள் போராட்டத்துக்கு முஸ்தீபு

கொழும்பு,ஜன.31

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாக்கமுன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு அரசாங்கம் இரண்டு நாள்களுக்குள் தீர்வு வழங்க வேண்டும். இல்லாவிடின் 85 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம். கொழும்பு துறைமுகத்தின் மேல் முனையத்தை இந்தியாவுக்கு வழங்குமாறு தொழிற்சங்கத்தினர் ஜனாதிபதிக்கு கோரிக்கைவிடுக்க வேண்டிய தேவை கிடையாது என துறைமுக ஊழியர் சங்கத்தின் பிரதான செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவித்தார்.

துறைமுக ஊழியர் சங்கத்தினர் முன்னெடுத்துள்ள போராட்டம் தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பாதுகாக்க அரசாங்கத்துடன் பேச்சுக்களை முன்னெடுப்பது பயனற்றது. கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ள பட்சத்தில் அரசாங்கம் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்க அதிக அக்கறை கொண்டுள்ளது.

கிழக்கு முனையத்தின் 49 வீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதில் எவ்வித மாற்றமும் கிடையாது என ஜனாதிபதி தொழிற்சங்கத்தினரிடம் தெளிவாகவும், உறுதியாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு முனையம் தொடர்பில் துறைமுகம் மற்றும் கப்பற்துறை அமைச்சின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட எழுவர் அடங்கிய குழுவின் மீது நம்பிக்கை கொள்ள முடியாது. குழுவினர் அரசாங்கத்துக்கு சார்பாகவே அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

குழுவினர் எதிர்வரும் அமைச்சரவையில் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் பெப்ரவரி மாதம் முதல்வாரத்தில் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது. இவ்வாறான பின்னணியில் அரசாங்கத்தின் செயல்பாட்டை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை துறைமுக அதிகார சபை முழுமையாக அபிவிருத்தி செய்யவேண்டும் என தொழிற்சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கையை மீளப்பெற்று, கொழும்பு துறைமுகத்தின் மேல் முனையத்தை அபிவிருத்தி செய்யும் பணியை இந்திய நிறுவனத்துக்கு வழங்குமாறு துறைமுக தொழிற்சங்கத்தினர் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுக்க வேண்டும் என அரசாங்கத் தரப்பிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை எம்மால் ஏற்க முடியாது.

கொழும்பு துறைமுகம் தொடர்பில் துறைமுக தொழிற்சங்கத்தினர் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கு இரண்டு நாள்களுக்குள் தீர்வை அரசாங்கம் வழங்க வேண்டும். இல்லாவிடின் 85 தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து நாடளாவிய ரீதியில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம்- என்றார். (எ)

## தாக்குதல் குற்றச்சாட்டில் தவிசாளர் கைது!

நோர்வூட்,ஜன.31

நபரொருவரைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் நுவரெலிய - நோர்வூட் பிரதேச சபை தவிசாளர் கைது செய்யப்பட்டார்.

பொகவந்தலாவை பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய நேற்று மாலை இவர் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

தாக்குதலுக்குள்ளான நபர் டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான தவிசாளர் ஹற்றன் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (எ)

## நகைகள் கொள்ளை மூவர் கைது

சம்மாந்துறை,ஜன.31

தங்க நகைகளை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் மூன்று சந்தேகநபர்களை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை அம்பாறை சம்மாந்துறை மலையடி கிராம பிரதேசத்தில் வீடுகளுக்குள் நுழைந்து தங்க நகைகளை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். (எ)

# “பாரத இதயத்தில் இலங்கைக்கு சிறப்பிடம்” தடுப்பூசி திட்டம் நிச்சயம் வெற்றியளிக்கும்

## உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நம்பிக்கை



கொழும்பு,ஜன.31

**ஒரு குடும்பம் - அயலகத்துக்கு முதலிடம் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கையில் பாரத இதயத்தில் இலங்கைக்கு என்றும் சிறப்பிடம் உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீண்டெழும் நோக்கில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கும் திட்டம் நிச்சயம் வெற்றியளிக்கும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

இந்திய தடுப்பூசியை பெற்றுக்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விமான நிலையத்துக்கு வந்திருந்தமையானது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவின் உச்ச நிலையை வெளிப்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கொரோனா தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் ஐ.டி.எச். வைத்தியசாலையில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு குறிப் பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: கொரோனா தடுப்பூசி வழங்கு வதன் மூலம் இலங்கை மீண்டும் உலக நாடுகளுடன் தொடர்புகளைப் பேணக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். இது முழு உலகையும் பாதித்துள்ள வைரஸ் பரவலாகும். எனவே காலம் மிக முக்கியமானது. எவ்வளவு வளங்கள் காணப்பட்டாலும் சுகாதாரம் மற்றும் விஞ்ஞான ரீதியில் முன் னேற்றமடைந்திருந்தாலும் எந்தவொரு நாட்டுக்கும் இந்த வைரஸுடன் போராட முடியவில்லை.

எனவே சர்வதேச தொடர்புகள் தான் இந்த வைரஸுக்கு எதிராகப் போராடுவதற்கான சிறந்த வழி முறையாகும். அயலகத்துக்கு முதலிடம் என்பதே இந்தியப் பிரதமர் நரேதந்திர மோடியின் கொள்கையாகும். அதற்கமைய இந்தியாவின் அயல் நாடுகளில் இலங்கையானது இந்திய மக்களின் மனதில் பிரதான இடம்பிடித்துள்ள நாடு என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் - என்றார். (எ)

## 2 ஆம் கட்டத்தில் கிடைக்கும் தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு

### மருத்துவர் ஹேமந்த ஹேரத் தகவல்

கொழும்பு,ஜன.31

இந்தியாவிடமிருந்து இரண்டாம் கட்டமாகப் பெற்றுக் கொள்ளவுள்ள ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ராஜெனேகா கொரோனா தடுப்பூசிகள் அடுத்த மூன்று வாரங்களில் இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளன.

சீனாவின் தடுப்பூசிகளும் அதே கால கட்டத்தில் வருவதனால் பொதுமக்களுக்கு இவற்றைப் பயன்படுத்த முன்னாயத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒக்ஸ்போர்ட் -அஸ்ட்ராஜெனேகா கொரோனா தடுப்பூசிகளை ஆறு வைத்தியசாலைகளில் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில் அடுத்த மூன்று தினங்களில் இந்தத் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதற்கான நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. எனினும் முதல் கட்டமாக ஐந்து இலட்சம் தடுப்பூசிகளை இலங்கையில் பயன்படுத்தவே வாய்ப்புக்கள் கிடைத்துள்ளதால் மக்களுக்கு இவற்றை ஏற்றிக்கொள்ள இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

இந்நிலையில் இந்தியாவிலிருந்து இரண்டாம் கட்டமாக மேலும் ஐந்து இலட்சம் அல்லது அதற்கும் சற்று அதிகமான தடுப்பூசிகளை மூன்று வாரங்களில் இலங்கைக்கு கொண்டு வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு கொண்டு வரப்படும் தடுப்பூசிகளை பொதுமக்களுக்குப் பயன்படுத்த முடியும் எனவும், 60 வயதுக்கு மேற்பட்ட நபர் களுக்கு இந்தத் தடுப்பூசிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

எவ்வாறாயினும், 60 வயதுக்கு மேற்பட்ட 38 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டில் வாழ்கின்றனர். எனவே அவர்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்க முடியாது. ஆகவே விசேட தேவைகொண்ட நபர்களுக்கும், தொற்றா நோய்களில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ள நபர்களையும் கருத்தில் கொண்டு அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்நிலையில் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் சீனாவிலிருந்தும் ‘சைனோபார்ம்” கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளன. இந்தியாவிலிருந்தும், சீனாவிலிருந்தும் கொண்டுவரப்படும் தடுப்பூசிகள் ஒரே காலகட்டத்தில் இலங்கைக்குக் கிடைக்கும் நிலையில் அதனையும் பயன்படுத்தி இலங்கையின் தற்போது உள்ள நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியும்- என்றார். (எ)

## இளைய தலைமுறை போதைப்பொருளுக்கு அடிமையாவதைத் தடுக்க விசேட திட்டம்

கொழும்பு,ஜன.31

இளைய தலைமுறையினர் போதைப்பொருளுக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு விசேட வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மூன்று பிரிவுகளின் கீழ் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது இளைய தலைமுறையினர் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு இலக்காகி வருகின்றனர். மூன்று பகுதிகளாக இதனை ஒழிக்க எதிர்பார்த்துள்ளோம். அதில் ஒன்று இயன்றளவு நாட்டுக்குள் வரும் போதைப்பொருள்களைத் தடுக்க எதிர்ப்பார்த்துள்ளோம். இந்த போதைப்பொருள்களில் பெரும்பான்மையானவை ஆப்கானிஸ்தானில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஊடாகத்தான் வருகின்றன. இந்திய கடல் பாதைகளை அறிந்து அந்தக் கடல் பாதைகளில் கடற்படைக் கப்பல்களை நிறுத்தி அவற்றை முழுமையாக தடுக்கவுள்ளோம். இரண்டாவதாக, கேள்வியை குறைத்துக் கொள்ள வேண்டும். கேள்விகளைக் குறைத்துக் கொள்ள நாளை பாடசாலைகளில் குழுவொன்றை அமைக்கவுள்ளோம். அதனூடாக போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் போதைப் பொருள்களின் ஆபத்துக்கள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்க முடியும். மூன்றாவதாக, போதைக்கு அடிமையானவர்களை மீண்டும் ஒருபோதும் சிறையில் அடைக்கமாட்டோம். அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள்- என்றார். (எ)

## யாழ். நகரில் பொலிஸாரால் நேற்று விசேட சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். நகர்ப் பகுதியில் நேற்று பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொரோனா வைரஸ் பர வலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யவும் நாட்டின் பல பாகங்களிலும் பொலிஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் யாழ்ப் பாணம் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் யாழ். நகர்ப் பகுதியிலும் விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.(எ)



ஈழநாடு
Eelanadu

# சர்வகட்சி தீர்மானங்களே இனப்பிரச்னைக்குத் தீர்வு

## திஸ்ஸ விதாரண உறுதி



கொழும்பு, ஜன.31

இனப்பிரச்னைக்குத் தீர்வாக சர்வகட்சித் தலைவர் குழு எடுத்த தீர்மானங்களை உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பிலான குழுவினரிடம் லங்கா சமசமாஜ கட்சி சார்பில் முன்வைக்கவுள்ளோம். சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய இனங்கள் மத்தியில் உள்ள அடிப்படைவாதிகளை தூண்டிவிட்டு அரசியல்வாதிகள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். இந்நிலை மாற்றமடைந்தால் மாத்திரமே நாடு முன்னேற்றமடையும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம், தமிழ் தரப்பு கோரிக்கை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பல்லின சமூகம் வாழும் நாட்டில் ஒரு இனத்தின் உரிமைகள் அரசமைப்பின் மூலம் முடக்கப்படும் போது அங்கு பிரிவினைவாதம் தோற்றம் பெறும் என்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும். தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்பு மாத்திரமல்ல அதற்கு முற்பட்ட கால அரசமைப்புக்கள் கூட முரண்பட்ட தன்மையிலும், பிற இனத்தின் உரிமைகளை முடக்கும் வகையிலும் காணப்பட்டன.

30 வருட கால சிவில் யுத்தம் தோற்றம் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். தவறான நிர்வாகம், எல்லை மீறிய அதிகாரப் பிரயோகங்கள் என்பன விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெறுவதற்கு பிரதான காரணியாக அமைந்தது. பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. இதற்கு சர்வதேச நாடுகளின் சுயநலபோக்கும் ஒரு காரணியாக இருந்தது.

நெருக்கடியான சூழ்நிலைகளுக்கு மத்தியிலேயே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2005 ஆம் ஆண்டு அரசாங்கத்தைப் பொறுப்பேற்றார். அக்கால கட்டத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுக்கு கொண்டுவர முடியாதளவுக்கு யுத்தம் உக்கிரமடைந்திருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடிக்கும் போது அப்பாவித் தமிழ் மக்களுக்குர் பாதிப்பு ஏற்படக்கூடாது என்று அவர் விசேட ஆலோசனைகளைப் படைகளுக்கு வழங்கினார்.

இனங்களுக்கு மத்தியில் புரையோடிபோயிருந்த இனப்பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டிய தேவை காணப்பட்டது. 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சர்வகட்சித் தலைவர் குழுக் கூட்டம் இடம்பெற்றது. பாராளுமன்றத்தை அங்கீகரித்த அனைத்து அரசியல் கட்சிகளும் சர்வகட்சிக் கூட்டத்தில் பங்குப்பற்றின. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. 20 தொடக்கம் 25 வரையான கூட்டங்கள் இடம்பெறும் போது அதிகாரப் பகிர்வு தொடர்பில் பேசப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணி சர்வகட்சித் தலைவர் கூட்டத்திலிருந்து வெளியேறியது.

சர்வகட்சித் தலைவர் குழுவின் அறிக்கை யுத்தம் முடிவடைந்ததுக்குப் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முன்வைக்கப்பட்டது. மாகாண மட்டத்தில் முழுமையான அதிகாரப் பகிர்வு, உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் அதிகாரப் பகிர்வு மற்றும் இனங்களுக்கிடையிலான சம அதிகார வழங்கல் என்ற பிரதான மூன்று விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. இவற்றை அக்காலக்கட்டத்தில் செயல்படுத்த உரிய கவனம் செலுத்தப்படவில்லை. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. - என்றார். (எ)

கொரோனா தடுப்பூசி வழங்கல்:

# ‘உள்நோக்கம் இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியாது’



வவுனியா, ஜன.31

இந்தியா இலங்கைக்கு கொரோனா தடுப்பூசி வழங்கியமையானது உள்நோக்கமாக இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தியாவால் இலங்கைக்கு கொரோனா தடுப்பூசி வழங்கியதானது எந்தவித பிரதி உபகாரம் இல்லாமலோ அல்லது எந்தவித உள்நோக்கமின்றி வழங்கியிருந்தால் அதனை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கின்றோம்.

ஆனால் கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத்தான் இந்தத் தடுப்பூசியை வழங்கியிருந்தால் அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான செயல்பாடுகளை இந்தியா மேற்கொள்ளக் கூடாது. இதேவேளை இந்தச்செயல்பாட்டுக்கு இலங்கை அரசாங்கமும் உடந்தையாகப் போகக்கூடாது.

இலங்கையில் எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி குறிப்பாக அம்பாந்தோட்டையை சீனாவுக்கு வழங்கியமை, அதேபோன்று கொழும்பு துறைமுகத்தை வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம்- என்றார். (எ)

# அப்பாவின் 31 நாள் நினைவு

## திரு. பிரான்சிஸ் வின்சன் டீ போல்



அப்பா!
உம்மை பற்றி
நீ கற்றுத் தந்த மொழியில்...
எப்படி எப்படி எல்லாமோ
தன் பாசம் உணர்த்தினாள் அம்மா.
ஒரேயொரு அழைத்தலில்
எல்லாமே உணர்த்தினாய் நீ.
நீ முன்னால் சொன்னதில்லை,
பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறோம்,
எம்மைப் பற்றிப் பெருமையாக
நீ பேசிக் கொண்டிருந்ததை.
அம்மா எத்தனையோ முறை
திட்டினாலும் உறைத்ததில்லை,
உடனேயே உறைத்திருக்கிறது
என்றேனும் உன் முகம் வாடும்போது.
உன் அப்பா எவ்வளவு அற்புதமானவராக
இருந்திருக்கிறார் தெரியுமா என்று
மற்றவர்கள் எம்மிடம் சொல்லும்போது தான் தெரிந்தது,
எத்தனை பேருக்குக் கிடைக்காத அப்பா
எமக்கு மட்டுமென நீயானாயென்று.
சிறுவயதில் எம் கரம் பிடித்து
நடை பயில சொல்லிக்கொடுத்த நீ,
எம் கரம் பிடித்தது முதல்,
எத்தனை பேர்,
நான் இருக்கிறேன்
என்று சொன்னாலும்,
எமக்கு உன்னை போல்
யார் இருக்க இயலும் அப்பா?
திட்டித் தீர்த்ததும் இல்லை,
வேண்டாம் என சொல்லியதுமில்லை,
இருந்தும் ஏதோ ஒன்றினால்
கட்டுப்படுத்தியது உன் அன்பு.
வெளிப்படையாக நீ காட்டியதில்லை,
உம் பாசத்தை.
இருந்தும்...
என்றும் நீ பெற நினைத்ததெல்லாம்
நாம் பெறவே நீ உழைத்தாய்.
நான் பிரிந்து இறைவனிடம் செல்ல
வேண்டிய நேரம் வந்து விட்டது.
நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்.
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்.
விசுவாசத்தைக் காத்துக்கெண்டேன்.
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே.
அதை ஆண்டவர் எனக்குத் தருவார்.;
என்று பைபிள் வரிகளை எமக்குரைத்து
நீ இறைவனிடம் சென்றுவிட்டாய்.
கொடுத்து வைத்தவன் நீ அப்பா.
இறைவனோடு நீ என்றும் வாழ்வாய்.
வானக தேவனிடம் உன்னை வழியனுப்ப வந்தவர்களின்
வாழ்த்தொலிகளை கேட்டபோதுதான் எமக்கு தெரிந்தது
வாழ்வென்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்று.
நாம் இன்னும் மறக்கவில்லை
நாம் சிரிக்கும்போது நீ புன்னகையானதை
நாம் அழும்போது நீ கண்ணீரானதை
தொட்டிலில் தூங்கினால்
நாம் விழுந்து விடுவோமோ என்பதால்
உன் தோள் மீது உறங்க வைத்ததை.
அகிலமே கூடி எதிர்த்தாலும்
எம்முடன் வரும் ஒருவனும் நீதான்.
தனிமையில் நாம் தவிக்கும் பொழுது
துணையாய் வரும் ஒருவனும் நீதான்
தோல்வியில் சுருளும் பொழுது
தூணாய் வருபவனும் நீதான்
நீ இறைவனின் சந்நிதானத்தில் இன்பமாக வாழ
நாம் தினம் இறைவனிடம் வேண்டிடுவோம் அப்பா.

றோஸ் கொட்,
கடற்கரைவீதி, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி. கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை -
புதிய நிகழ்ச்சி (இன்று முதல்)




**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி - திருமலை
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : ஹலோ கோடம் பாக்கம்
7.00 மணி : SPOT LIGHT- நாடாளுமன்ற
உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மண : பட்டிமன்றம்
10.00 மணி : பதிவு - வாசன் -
இலங்கை மருத்துவ சங்க ஊடக பேச்சாளர்




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.30 மணி : சைவசமயம்

## ஓம் ரீவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ் சங்கரத்தை நாகபூஷணி
அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : மட்டக்களப்பு பெரியகல்லாறு சித்தி
விநாயகர் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ் சங்கரத்தை நாகபூஷணி
அம்பாள் ஆலய அலங்கார உற்சவம்

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : களீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.